தமிழாக்கம்

மே - ஜூன் 2022

# The Herald

## of Christ's Kingdom



# ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி

- தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தம்
- விடுதலை
- இராஜக்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுக்கான வாக்குத்தத்தம்
- வார்த்தைகள், வாழ்க்கை மற்றும் வேலை
- தானியேல், நம்பிக்கையின் ஒரு தீர்க்கதரிசி
- என் நாமத்திற்கு அஞ்சுபவர்கள்

ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி

# ஆதியிலே

ஆபிரகாமிய வாக்குறுதியையும், தேவனிடமிருந்து வெளிப்படும் படிப்படியான நிபந்தனையற்ற சத்தியத்தின் தீர்க்கதரிசன விவரங்களை காட்டும், இருபது அடுத்தடுத்த தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளையும், இந்தப் பிரதி கருத்தில் கொள்கிறது.

இந்த இதழில் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் ஏழு கோட்பாடுகள், கட்டமைப்பாக ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், காலப்போக்கில் அவர்களின் தீர்க்கதரிசனத்தின் செயல்பாடுகளை கண்காணிக்கிறது :- ஒப்புரவாக்குதல், உயிர்த்தெழுதல், மறுசீரமைப்பு, மீட்கும் தொகை, இஸ்ரயேலர்கள் தங்கள் தேசத்திற்கு மீட்டெடுக்கப்படுதல் மற்றும் இஸ்ரயேலர்கள் தேவனிடம் திரும்பச் செல்லுதல்.

ஆபிரகாமிய வாக்குறுதி எப்படி நிறைவேற்றப்படும் ? தேவனுடைய ஜனங்கள் அதன் நிறைவேற்றத்தை எப்போது எதிர்பார்க்கலாம் ? யார் "ஆபிரகாமின் சந்ததியாக" மாறுவார்கள் ? மேலும் பிரச்சனைகள் நிறைந்த உலகத்தின் மத்தியில் தேவனுடைய இரக்கம், தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் எவ்வாறு வெளிப்படும் ?

**தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தம்** என்ற தலைப்பு ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் வாழ்க்கையை கருத்தில் கொள்கிறது. ஆதியில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தையும், ஈசாக்கை பலியாக கொடுப்பதற்கு தேவனுடைய கோரிக்கை மற்றும் ஆபிரகாமின் வாக்களிக்கப்பட்ட சந்ததியாக இயேசுவில் சித்திரிக்கப்படும் பாவநிவாரணத்தின் அனுபவத்தின் விவரங்களையும் இது ஆராய்கிறது.

**விடுதலை** என்ற தலைப்பு யோசேப்பு, மோசே மற்றும் யோசுவா ஆகியோரின் வாழ்க்கையைப் பரிசீலிக்கிறது மற்றும் இந்த தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவரும் எவ்வாறு சிறந்த மீட்பராகிய கிறிஸ்துவின் உதாரணத்தை வழங்குகிறார்கள் என்பதையும் காட்டுகிறது. ஆசீர்வாதங்கள் பாய்வதற்கு முன்பு ஒரு பலியின் காணிக்கை தேவைப்பட்டது.

**இராஜாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுக்கான** வாக்குத்தத்தம் என்ற தலைப்பு தாவீது, சாலொமோன், எலியா மற்றும் எலிசா மற்றும் அவர்களின் வாழ்வில் வெளிப்பட்ட தேவனுடைய அன்பான கருணை ஆகியவற்றை ஆராய்கிறது. தாவீதின் மூன்று அபிஷேகங்கள், நம்முடைய கர்த்தரின் மூன்று அபிஷேகங்களைச் சுட்டிக்காட்டுகின்றது. எலியாவின் வாழ்க்கையில் நடந்த எட்டு அற்புதங்கள், சுவிசேஷ யுக நிகழ்வுகளைப் பிரதிபலிக்கின்றது. எலிசாவின் வாழ்க்கையில் நடந்த பதினாறு அற்புதங்கள், ஆயிரமாண்டு யுகத்தில் நடக்கும் நிகழ்வுகளைப் பிரதிபலிக்கிறது.

**வார்த்தைகள் வாழ்க்கை மற்றும் வேலை** என்ற தலைப்பு ஏசாயா, மிகாயா, யோயேல் மற்றும் ஆமோஸ் ஆகியோரின் சில அழகான தீர்க்கதரிசனங்களை ஆராய்கிறது. ஆனால் அப்போஸ்தலனாகிய மத்தேயு, இயேசுவை ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் மகன் என்று அடையாளம் காண்பதில் இருந்து தொடங்குகிறது.

**தானியேல், நம்பிக்கையின் ஒரு தீர்க்கதரிசி** என்ற தலைப்பு, தானியேலின் வாழ்க்கை, சிறையிருப்பில் அவரது நேர்மை, அவருடைய அறிவுக்கான தாகம் மற்றும் கனவுகளின் அற்புதமான விளக்கத்திற்காக தேவனைச் சார்ந்திருத்தல் ஆகியவற்றை ஆராய்கிறது. இயேசுவின் முதல் மற்றும் இரண்டாம் வருகைகளைப் பற்றிய காலக் கணிப்புகளை எழுதும் பாக்கியம் தானியேலுக்கு வழங்கப்பட்டது.

**என் நாமத்திற்கு அஞ்சுபவர்கள்** என்ற தலைப்பு ஓசியா, செப்பனியா, எரேமியா சகரியா மற்றும் மல்கியா ஆகியோரின் தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு ஒப்புரவாக்குதல், மறுசீரமைப்பு, திரும்ப கொடுத்தல் மற்றும் இஸ்ரயேல் தேவனிடம் திரும்பும் நம்பிக்கையை அளிப்பதை விவரிக்கிறது. இஸ்ரயேலரின் குறைவான விசுவாசம், தேவனுடைய நீதியின் மேல் நாம் கவனம் செலுத்த நம்மை ஊக்குவிக்கிறது.

இந்த பிரதியால் நீங்கள் புத்துணர்வுப் பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறோம். மேலும் பிரதியின் மற்ற பகுதிகளில் உள்ளவைகளில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டறிய உங்களை ஊக்குவிக்கிறோம்.

**மே / ஜூன் 2022, தொகுப்பு 104, எண் 3**


**தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தம்** 6
ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு

**விடுதலை** 10
யோசேப்பு, மோசே, யோசுவா

**இராஜாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுக்கான வாக்குத்தத்தம்** 14
தாவீது, சாலொமோன், எலியா, எலிசா

**வார்த்தைகள், வாழ்க்கை மற்றும் வேலை** 22
ஏசாயா, மீகா, யோயேல், ஆமோஸ்

**தானியேல், நம்பிக்கையின் ஒரு தீர்க்கதரிசி** 26
சிறையில் இருக்கும் ஒரு இஸ்ரயேலன்

**என் நாமத்திற்கு அஞ்சுபவர்கள்** 29
ஓசியா, செப்பனியா, எரேமியா, எசேக்கியேல், சகரியா, மல்கியா

**இன்றைய தீர்க்கதரிசனம்** 33
இஸ்ரயேல் மற்றும் ரஷ்யா - உக்ரேன் மோதல்

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு

# தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தம்

David Rice

"நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும்... உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆதியாகமம் *22:16-18*)


நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு "பூமியின் முழு குடும்பங்களையும்", ஆசீர்வதிப்பதன் நோக்கத்துடன், விசுவாசமுள்ள ஒரு மனிதனாகிய ஆபிரகாமைத் தேவன் தேர்ந்தெடுத்தார். தேவனுடைய திட்டத்தின் மூன்று யுகங்களும் இந்த செயல்பாட்டில் பயன்படுத்தப் படுகின்றது. - யூத யுகம், சுவிசேஷ யுகம் மற்றும் ஆயிரமாண்டு யுகம். இந்த மூன்று யுகங்களிலும் தேவன் இஸ்ரயேல் தேசத்தையும், பரலோக சபை வகுப்பாரையும் வளர்ச்சி அடையச் செய்து, உலகத்தின் மனுக்குலத்திற்கு நித்திய ஜீவனைத் திரும்ப கொடுப்பார்.


தேவன் ஆபிரகாமிடம் ஈசாக்கை பலியாக கேட்ட பதிவுகள், நமது ஆரம்ப உரையின் ஆதாரம்- ஆதியாகமம் 22. இது ஆபிரகாமின் விசுவாசத்திற்குக் கடுமையான சோதனையாக இருந்தது. தேவனுடைய திட்டத்தின் முக்கியமான அஸ்திபாரமாகிய, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்திற்கான மீட்கும் பொருளாக பலி செலுத்துவதையும் சித்தரிக்கிறது.

"... தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்...உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்."(ஆதியாகமம் 22:1,2) **மோரியா** என்ற இடம் அர்த்தமுள்ளதாக இருக்கிறது, அங்குதான் ஆலயம் கட்டப்படக்கூடியதாக இருந்தது. "பின்பு சாலொமோன் எருசலேமிலே ... மோரியா என்னும் மலையிலே எபூசியனாகிய ஓர்னானின் களம் ... கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்துவக்கினான்." (2 நாளாகமம் 3:1) இயேசு தாமே எருசலேமுக்கு மேற்கே உள்ள முக்கியமான இடமாகிய கல்வாரியில் இறப்பார்.

2ம் வசனம், "தகன பலியாக" செலுத்தப்படவேண்டும் என்று அந்த பலியைக் குறித்த விதத்தை குறிப்பிடுகிறது. லேவியராகமத்தில் மூன்று அடிப்படையான பலிகள் உள்ளன - தகன பலி, சமாதான பலி மற்றும் பாவ நிவாரண பலி. **தகனபலியைச்** செலுத்துபவரை, "ஒப்புரவாவதற்கு" அந்த பலி ஏற்றுகொள்ளப்பட்டது. மேலும் சிலுவையின் மேல் இயேசுவின் மரணம் மனுக்குலத்தை ஒப்புரவாக்கியது போல அது நேரடியாக கட்டையின் மேல் வைக்கப்பட்டது. (லேவியராகமம் 1:4, 8) "அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் **சிலுவையின் மேல்** சுமந்தார்" (1பேதுரு2:24)

ஈசாக்கு மற்றும் இரண்டு இளைஞர்களுடன் ஆபிரகாம் தனது பயணத்தைத் தொடங்கினார். "மூன்றாம் நாளில் ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, தூரத்திலே அந்த இடத்தைக் கண்டான்" (ஆதியாகமம் 22:4) "பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்." என்று இயேசு பின்னர் கூறுவார். ஆதாமிலிருந்து ஆபிரகாம் வரையிலான காலம் 2000 ஆண்டுகளுக்கு சற்று அதிகமாக இருந்தது, அதனால் மேசியாவைப் பற்றிய ஆபிரகாமின் தீர்க்கதரிசன பார்வையில், மனுக்குலத்தின் மூன்றாவது ஆயிரம் ஆண்டு






நாளில் நிகழக்கூடியவைகளை அவர் "தூரத்தில்" கண்டிருக்கவேண்டும்.

"ஆபிரகாம் தகனபலிக்குக் **கட்டைகளை** எடுத்து தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்து" என்று ஆதியாகமம் 22:6 கூறுகிறது. "அவர் தம்முடைய **சிலுவையைச்** சுமந்து கொண்டு ....புறப்பட்டுப்போனார்." (யோவான் 19:17) என்று அப்போஸ்தலனாகிய யோவான் பின்னர் இயேசுவைப் பற்றி கூறினார்.

ஆபிரகாமும் ஈசாக்கும் மட்டும் மலையேறினார்கள், ஒருவேளை தேவன் தம்முடைய "ஒரே குமாரனை" பலி செலுத்துவதற்கு பொறுப்பானவர் என்பதைக் குறிக்கலாம். (யோவான் 3-16) அவர்கள் ஏறியபோது, "தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்று ஈசாக்கு கேட்டார். "அதற்கு ஆபிரகாம் - என் மகனே, தேவன் நமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்." (ஆதியாகமம் 22:7,8) பின்னர், ஒரு தூதன் ஆபிரகாமின் கையை கட்டுப்படுத்தினார். ஆனால் **ஆட்டுக்குட்டியான** ஈசாக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

அடுத்து குறிப்பிடப்பட்ட மிருகம் வித்தியாசமாக இருந்தது. அது ஆபிரகாம் தன் குமாரனுக்கு பதிலாக "புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடா" சர்வாங்க தகன பலியாக செலுத்தப்பட்டது. புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த அந்த ஆட்டுக்கடா, இயேசுவின் தலையில் வைக்கப்பட்ட முள் கிரீடத்தை நினைவூட்டுகிறது. (மத்தேயு27:28-29)

"ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான், அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் (அல்லது கர்த்தர் வழங்குவார் )என்று இந்நாள்வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது." (ஆதியாகமம் 22:14)ஆதாமையும் அவரது இனத்தையும் சாபத்திலிருந்து மீட்க தேவன் தாமே தம் மகனைப் பலியாக தந்து நம் பாவங்களிலிருந்து நமக்கு மீட்பளித்தார்.

**சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்**

தேவனுடைய தூதன் அவரை இரண்டாம் முறை அழைத்து -"நீ உன் புத்திரன் என்றும் உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால் நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்று உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும் நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆதியாகமம் 22:16-18,)

இது ஒரு குறிப்பிடத்தக்க வாக்களிப்பு. தேவன் பேசும்போது, எதைப் பேசினாலும் அது நிறைவேறும் என்பதில் நமக்கு முழு உறுதி உண்டு. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் தேவன் குறிப்பிடத்தக்க மற்றும் இணையற்ற ஒன்றைச் செய்தார். தேவனே தம் வாக்குறுதியை நிறைவேற்றுவதாக சத்தியம் செய்தார். கிறிஸ்து இயேசு பாடுபட்டு சிலுவையில் மரித்தபோது, தேவன் மறுபடியும் பேசினார். "அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரை அடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்தபின்பு, இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்கு காணப்பட்டார்கள். நூற்றுக்கு அதிபதியும் அவனோடேகூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து - மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்." (மத்தேயு 27:51-54) இயேசுவின் மரணத்தின் மூலம் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்பதற்கு தேவனிடமிருந்து வரம்பு மீறிய தூய்மையான சாட்சியாக இந்த செயல்கள் இருந்தது.

தேவனுடைய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற இரண்டு இரட்சிப்பின் யுகங்கள் தொடங்கப்பட்டன. இயேசுவின் மாம்சம் கிழிக்கப்பட்டதை அடையாளமாக காட்டும், தேவாலயத்தின் கிழிந்த திரைசீலை, "அனைவரும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு செல்வதற்கான வழி" வெளிப்பட்டதைக் குறிக்கிறது. "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுடைய பரம அழைப்பு", "வானத்து நட்சத்திரங்கள்" அல்லது மணவாட்டி வகுப்பார் வளர்ச்சி அடைவதற்கு திறக்கப்பட்டது. (எபிரெயர் 10:20,9:8) தேவனுடைய நியாயத்தீர்ப்புகள், பழைய வல்லமைகளை அகற்றி, அவைகளுக்கு பதிலாக அவருடைய நீதியின் ஆட்சியை ஸ்தாபிக்கும் என்பதை அப்பொழுது நிலத்தை உலுக்கிய நிலநடுக்கம் காண்பிக்கிறது. அன்று கல்லறைகள் திறக்கப்பட்ட காரியம், எல்லா இடங்களிலும் உள்ள முழு மனுக்குலமும், மரணத்திலிருந்து எழுந்து "கடல் கரை மணலாக" ஆசீர்வதிக்கப்படும் நேரத்தை குறிக்கிறது.

**இரண்டு மாறாத விஷயங்கள்**

"அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார் நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்." (எபிரெயர் 6:17, 18) தேவனுடைய மாற்ற முடியாத உறுதிமொழியாக, ஈசாக்கின் பலி அமைந்தது. கல்வாரியில் இயேசுவின் மரணம் தேவனுடைய வாக்குறுதியையும், உறுதிமொழியையும் நிறைவேற்றுவதற்கு மாறாத அடித்தளத்தை வழங்கியது. "ஆபிரகாம் தன் வேலைக்காரிடத்துக்குத் திரும்பி வந்தான், அவர்கள் எழுந்து புறப்பட்டு, ஏகமாய்ப் பெயர்செபாவுக்குப் போனார்கள், ஆபிரகாம் பெயர்செபாவிலே குடியிருந்தான்" (ஆதியாகமம் 22:19) பெயர்செபா என்பதற்கு "ஆணையிட்டுக்கொண்ட துரவு" என்று பொருள்.(ஆதியாகமம் 21:31) இது ஒரு




பொருத்தமான பெயர். இயேசுவே ஜீவத் தண்ணீரின் ஊற்று என்பதை இந்த **துரவு** நமக்கு நினைவூட்டுகிறது. மனுக்குலத்தை ஆசீர்வதிக்க இந்த தண்ணீர் பயன்படுத்தப்படுவதாக **உறுதிமொழி** அளிக்கப்படுகிறது.

இந்த பயணத்தில் ஆபிரகாம் மற்றும் ஈசாக்குடன் சென்ற இரண்டு வேலைக்காரர்களும், கல்வாரியை தொடரும் இரட்சிப்பின் யுகங்களில் ஈடுபட்டுள்ள இரண்டு வகுப்பாரை நமக்கு நினைவூட்டுகிறது. சுவிசேஷ யுகத்தில், யூத விசுவாசிகள் பெந்தெகொஸ்தேவில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர், கொர்நேலியுவை தொடர்ந்து புறஜாதிகள் அனுமதிக்கப்பட்டனர்.

இரட்சிப்பின் இரண்டாம் யுகமாகிய ஆயிரமாண்டு இராஜ்யத்தில், ஆதாம் மற்றும் முழு மனுக்குலமும் தேவனை அணுகுவதற்கு, ஏழாம் ஆயிரம் ஆண்டின் ஓய்வு நாளிலும் வாசல்கள் திறந்திருக்கும் என்று எசேக்கியேல் 46:1ல் காண்பிக்கப்படுகிறது. இஸ்ரயேலின் கிருபையின் காலம் மீண்டும் அதிகாரிக்கும் என்பதை தெரிவிக்கும்படியாக அமாவாசையிலும் வாசல்கள் திறந்திருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. புறஜாதிகள் மற்றும் இஸ்ரயேலர்கள் ஆகிய இந்த இரண்டு வகுப்பாரும், இயேசு சிலுவையில் அறையப்பட்ட நேரத்தில் இருந்ததாக பரிந்துரைக்கப்படுகிறது. மூன்றாம் மணி வேளையில், யூதர்களை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்க இயேசு சிலுவையில் அறையப்பட்டார். பின்னர் ஒன்பதாம் பணி நேரத்தில் அனைவருக்காகவும் அவர் ஜீவனை விட்டார்.

இதற்குபின், மூன்றாம் மணி நேரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் யூத சீஷர்கள் மீதும், ஒன்பதாம் பணி நேரத்தில் புறஜாதியான கொர்நேலியுவின் மீதும் பரிசுத்த ஆவி இறங்கியது.

**வடக்கில் இருந்து நல்ல செய்தி**

"இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, ஒருவன் ஆபிரகாமிடத்தில் வந்து - மில்க்காளும் உன் சகோதரனாகிய நாகோருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள்.." (ஆதியாகமம் 22:20) என்ற செய்தி வந்தது. பலியின் யுகத்திற்கு பிறகு, ஆரானுக்கு வடக்கே தங்கியிருந்த ஆபிரகாமின் சகோதரரை அடையாளப்படுத்தும் மாம்ச இஸ்ரயேலைப் பற்றிய நற்செய்தி வந்ததாக இது அறிவுறுத்துகிறது. மாம்ச இஸ்ரயேலர் சுவிசேஷத்தின் வாய்ப்பை பயன்படுத்தாதது போல, அவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் வரவில்லை.

ஆனால் அவைகள் மறக்கப்படவில்லை. ஆதியாகமம் 22:21- 24 ல் இஸ்ரயேலின் 12 கோத்திரங்களைக் குறிக்கும் நாகோரின் 12 குமாரர்கள் பட்டியலிடப்படுகிறார்கள். இரட்சிப்பின் இரண்டாம் யுகத்தின் தொடக்கத்தில், இராஜ்யத்திற்கு ஆயத்தமான ஒரு நல்ல நிலையில் மாம்ச இஸ்ரயேலர் காணப்படுகிறார்கள். மாம்சஇஸ்ரயேலின் மற்றுமொரு அடையாளமாக இருக்கும் இஸ்மயேலுக்கும் 12 குமாரர்கள் இருந்தனர். (ஆதியாகமம் 25:16) அந்த 12 மற்றும் நாகோரின் 12, ஆகிய இரண்டும் மாம்ச இஸ்ரயேலரை அடையாளப்படுத்துகிறார்கள். அடுத்த வசனமாகிய ஆதியாகமம் 23:1 ல் ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஆவிக்குரிய அல்லது பரலோகப் பகுதியை அடையாளப்படுத்தும் சாராளின் மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவளுடைய மறைவு சுவிசேஷ யுகம் நிறைவடைவதை குறிக்கிறது. இது ஆயிரமாண்டு இராஜ்யத்திற்கான வழியைத் திறக்கிறது.

**பூமியின் தூள்**

ஈசாக்கு பலியாக ஒப்புகொடுக்கப்பட்ட பின், தேவனுடைய வாக்குத்தத்தத்தில், "வானத்தின் நட்சத்திரங்கள்" மற்றும் "கடல் கரையின் மணல்" ஆகிய ஆபிரகாமின் சந்ததியைப் பற்றிய இரண்டு விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவை கிறிஸ்துவின் மரணத்தைத் தொடர்ந்து வரும் இரட்சிப்பின் இரண்டு யுகங்களை இணைக்கின்றது.

இருப்பினும், ஆபிரகாமின் சந்ததியைப் பற்றிய மூன்றாவது விளக்கமும் உள்ளது, whose first mention precedes the othersஅதன் முதல் குறிப்பு மற்றவர்களுக்கு முந்தியது. ) இது "பூமியின் தூள்". இது முதலில் ஆதியாகமம் 13:14-17ல் காணப்படுகிறது. "கர்த்தர் ஆபிராமை நோக்கி- உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும் மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து..."(வசனம் 14, 15)

இங்கு பொருள் - வாக்குத்தத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தைப் பற்றியது. ஆபிரகாமின் வழி வந்த ஈசாக்கு மற்றும் யாக்கோபின் சந்ததியனராகிய இஸ்ரயேல், 400 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிலத்தைப் பெறுவார்கள். (ஆதியாகமம் 15:13) அது எகிப்திலிருந்து இஸ்ரயேல் வெளியேறி, கானானைக் கைப்பற்றிய பிறகு நடந்தவை. இவ்வாறாக, "உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்" (வசனம்16) என்பது மாம்ச இஸ்ரயேலுக்கு ஒரு அடையாளமான அர்த்தம் கொண்டிருந்தது. தேசத்தைப் பற்றிய அந்த வாக்குறுதி, யூதர்களின் காலத்தில் மாம்ச இஸ்ரயேலுக்கு நிறைவேற்றப் பட்டது. அவர்களின் கீழ்ப்படியாமையின் காரணமாக பின்னர் அசீரியர்கள் மற்றும் பாபிலோனியர்களால் தேசத்திலிருந்து அவர்கள் விரட்டப்பட்டனர் என்பது உண்மை. ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் மீட்கப்படுவார்கள் என்று தேவன் தீர்க்கதரிசிகளின் மூலமாக அவர்களுக்கு வாக்குறுதி அளித்தார். அவர்கள் பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்ட பிறகு திரும்பி வந்தனர். இன்று மீண்டும் மீட்டெடுக்கப்பட்டார்கள். ஆனால், ஆபிரகாமின் சந்ததியினருக்கு தேசம் கொடுப்பதாக தேவனுடைய வாக்குறுதி, கல்வாரியின் இயேசு மரிப்பதற்கு முன், யூதர்களின் காலத்தில் முதன்முதலில் நிறைவேறியது. ஒருவேளை அதனால்தான், ஆபிரகாம் ஈசாக்கை பலி செலுத்தும் போது, நட்சத்திரங்கள் மற்றும் மணல் ஆகிய இரண்டு வகுப்பாரைப் பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கலாம். இந்த இரண்டு வகுப்பாரும் இயேசுவின் மரணத்திற்குப் பின் வளர்ச்சி அடைந்தனர்.

ஆபிரகாமின் சந்ததி, வரிசையாக மூன்று பெயர்களால் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது - பூமியின் தூள், வானத்தின் நட்சத்திரங்கள் மற்றும் கடல் கரை மணல். இந்த மூன்று வகுப்பாரும் தேவனுடைய திட்டத்தின் மூன்று வரிசையான யுகங்களுக்கு (யூத யுகம், சுவிசேஷ யுகம், ஆயிரமாண்டு யுகம்)பொருந்தக்கூடியதாக உள்ளது. பூமியின் தூள் இஸ்ரயேல், நட்சத்திரங்கள் சபை, மணல் உலகம்.

**மூன்று ஸ்திரீகள்**

இதே மூன்று வரிசையை ஆபிரகாமின் வாழ்க்கையில் உள்ள மூன்று ஸ்திரீகள் குறிப்பிடப்படுகிறார்கள். இந்த ஸ்திரீகளால் பெற்ற பிள்ளைகள் பழைய ஏற்பாட்டில் வரிசையாக பெயரிடப்பட்டிருக்கிறார்கள். தேவன் வாக்குத்தத்தத்தையும் (ஆதியாகமம் 12:7) உறுதிமொழியையும் (ஆபிரகாம் 22:16)அளித்தபோது சாராள் ஆபிரகாமிக்கு மனைவியாக இருந்தாள். கொடுக்கப்பட்ட வாக்குறுதியானது, உயர்ந்த அர்த்தமுள்ள உலகத்தை ஆசீர்வதிக்கும், ஆபிரகாமின் சந்ததியான இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய நோக்கத்தை கொண்டது. (கலாத்தியர் 3:16)

உலகத்தை ஆசீர்வதிப்பதற்காக, ஆபிரகாமுடன் தேவன் செய்த மூலமுதலான உடன்படிக்கையை சாராள் அடையாளப்படுத்துகிறாள். அவளுடைய குமாரன் ஈசாக்கு கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறார். ஆயினும் கலாத்தியரில் 3:29 பவுல் இதை சபைக்கும் பொருத்தி காண்பிக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால், "நாமும் ஆபிரகாமின் சந்ததியாரும், வாக்குத்தத்தத்தின்படி அவருடைய உடன் சுதந்திரமாகவும் இருக்கிறோம்." "சகோதரரே, ஈசாக்கைப் போல நாமும் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்." (கலாத்தியர் 4:28)

பவுல் கேத்துராளைப் பற்றி பேசவில்லை. யூத யுகம் முடிந்து, சுவிசேஷ யுகம் துவங்கப்படும் மாற்றத்தில் வாழ்ந்த பவுலின் எண்ணங்கள் இதை மட்டுமே நோக்கியது. ஆனால் சாராள் மரித்த பின், ஆபிரகாம் மற்றொரு மனைவியான கேத்துராளை மணந்து வேறு குழந்தைகளையும் பெற்றார். இவ்வாறு, ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஆவிக்குரிய பகுதியின் முடிவிற்கு பின், மற்றொரு அம்சம் துவங்குகிறது. வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையின் பூமிக்குரிய பகுதியை கேத்துராள் சித்தரிக்கிறாள்.

1நாளாகமம் 1:32ன் படி சாராள் மரிப்பதற்கு முன், கேத்துராள் ஆபிரகாமின் மறுமனையாட்டியாக இருந்தபோது அவருக்கு ஆறு குமாரர்களை பெற்றாள். 6000 வருடங்கள் பாவத்தில் பிறந்த உலக மனுக்குலத்தை கேத்துராளின் ஆறு குமாரர்கள் அடையாளப்படுத்துவது பொருத்தமாக உள்ளது. சாராளின் மரணத்திற்கு பின், கேத்துராள் ஆபிரகாமின் மனைவியாக மாறியதால், கேத்துராளின் குமாரர்களின் நிலை உயர்ந்திருக்கும். அதேபோல் இராஜ்யத்தில் மனுக்குலத்தின் நிலை உயர்த்தப்படும். அதைத் தொடர்ந்து, ஆபிரகாம் கேத்துராளின் ஆறு குமாரர்களை,"கிழக்கே போகக் கீழ்தேசத்துக்கு அனுப்பிவிட்டார்." மனிதனுடைய ஆதிகால பரதீஸ், "கிழக்கு திசையில் உள்ள ஏதேனில்" இருந்ததை நமக்கு நினைப்பூட்டுகிறது. (ஆதியாகமம் 25:6, 2:8)

**நான்கு இடங்கள் - நான்கு யுகங்கள்**

ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, நான்கு யுகங்களும் தேவனுடைய வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களின் நிறைவேற்றத்திற்கு நம்மை அழைத்துச் செல்கின்றது. ஒருவேளை ஆபிரகாம் எகிப்து செல்லும் வரை, அவர் பயணத்தில் ஈடுபட்டுள்ள நான்கு இடங்களால் இவைகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கலாம். ஏனெனில் அதற்கு பின் மற்றொரு சித்திரம் தொடங்குகிறது.

ஆபிரகாம் கல்தேயரின் பட்டணமாகிய ஊரில் இருந்து ஆரம்பித்தார். அவர் தனது தந்தை தேராகுவுடன் அங்கிருந்து ஆரானுக்கும், பின்னர் சீகேமுக்கும், இறுதியாக பெத்தேலுக்கும், ஆகிய நான்கு இடங்களுக்குச் சென்றார். ஆரான், இஸ்ரயேலின் 12 கோத்திரங்களுடன் இணைக்கப்பட்டதாக முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு தொடர்பாக பார்க்கும்போது, ஆரான் யூத யுகத்தை குறிப்பிடுகிறது. யூத யுகத்தின் போது, இஸ்ரயேல் உலகின் பழைய புறஜாதிக் கருத்துக்களை விட்டுவிட்டு, யெகோவா

தேவனை வணங்க உறுதிபூண்ட தேசமாக மாறியது. ஒருவேளை கல்தேயர்களின் ஊர் என்ற பட்டணம், வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்ட முந்தைய யுகமாகிய முற்பிதாக்களின் யுகத்தை குறிக்கவேண்டும்.

ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு வந்தபோது, முதலில் அவர் சீகேமில் நின்றார். ஆபிரகாமைப் பற்றிய விவரங்களில் முதன் முறையாக, அங்கு ஒரு பலிபீடம் குறிப்பிடப்படுகிறது. சிகேம் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்தினால், இரட்சிப்பின் முதல் யுகத்தைத் துவக்கின, இயேசுவின் பலி அங்குள்ள பலிபீடத்தை நமக்கு நினைப்பூட்டுவது பொருத்தமானது.




அடுத்து, ஆபிரகாம் பெத்தேலுக்கு கிழக்கே, "தேவனுடைய வீட்டில்" நின்றார். இங்கேயும் அவர் ஒரு பலிபீடத்தை கட்டினார். மேலும் அங்கு "யெகோவாவின் நாமத்தை தொழுது கொண்டார்" (ஆதியாகமம் 12:8) ஒருவேளை இந்த இடம் மனுக்குலத்தை சாபத்திலிருந்து விடுவிக்கும் இரட்சிப்பின் இரண்டாம் யுகத்தை குறிக்கலாம். இவ்வாறு, முற்பிதாக்களின் யுகத்திற்குப் பின், ஆசீர்வாதத்தின் மூன்று யுகங்களும் பின்தொடருகிறது. மூன்று ஸ்திரீகள் ஆபிரகாமுக்கு குழந்தைகளைப் பெற்றார்கள். ஆபிரகாமின் சந்ததியைப் பற்றிய முன்று விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விஷயத்திலும், யூத யுகம், சுவிசேஷ யுகம் மற்றும் ஆயிரமாண்டு யுகம் ஆகிய மூன்று யுகங்களின் அடையாளங்களின் முன்னோட்டம் நம்மிடம் உள்ளது.

**வெகு சமீபம்**

இன்று, சற்று நேரத்தில், ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள், "எல்லா தேசங்களையும்" சென்றடையும். பின்னர், ஒவ்வொரு நபரும் விசுவாசத்தால் கிறிஸ்துவுக்குள் வந்து, ஆவிக்குரிய அர்த்தத்தில், ஆபிரகாமின் வழித்தோன்றலாக, "நம் அனைவருக்கும் பிதா"என்று ஒப்புக்கொள்ளவார்கள். (ரோமர் 4:16)

## யோசேப்பு, மோசே, யோசுவா

# விடுதலை

Ernie Kuenzli


"நம்மையும் நம்முடைய பிதாக்களையும் அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, நம்முடைய கண்களுக்கு முன்பாகப் பெரிய அடையாளங்களைச் செய்து, நாம் நடந்த எல்லா வழியிலும் நாம் கடந்து வந்த எல்லா ஜனங்களுக்குள்ளும் நம்மைக் காப்பாற்றினவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தாமே." (யோசுவா *24:17*)

மையத்தில், ஆபிரகாமின் வாக்குத்தத்தம் மற்றும் உடன்படிக்கை ஒரு விடுதலையின் கதையாகும்: ஊர் என்ற பட்டணத்தின் விக்கிரக வழிபாட்டிலிருந்து ஆபிரகாமின் விடுதலை, ஆபிரகாமின் குடும்பம் அவர்களுடைய சொந்த தேசத்திற்கு விடுவித்தல், இறுதியில், பாவம் மற்றும் மரணத்தின் ஆட்சியிலிருந்து மனுக்குலத்தின் விடுதலை. ஆனால் இந்த விடுதலையை நிறைவேற்ற ஒரு இரட்சகர் தேவைப்பட்டார். தேவன் ஆபிரகாமின் உடன்படிக்கை மற்றும் அதன் அடுத்த உடன்படிக்கைகள் (புதிய பிரமாணம்) மூலம் அந்த இரட்சகர் மற்றும் அவர் வழங்கும் விடுதலை ஆகிய இரண்டையும் பற்றி, ஏராளமான தகவல்களை வழங்குகிறது. இஸ்ரயேலின் வரலாற்றில் முக்கியப் பங்கு வகித்த மூன்று நபர்களில் இந்த இரட்சிப்பு குறிப்பாக விளக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம் : யோசேப்பு, யாக்கோபு மற்றும் யோசுவா.

ஒவ்வொருவரும் மாம்சமான இஸ்ரயேலை விடுவிப்பதில் முக்கிய பங்கு வகித்தது மட்டுமல்லாமல், இஸ்ரயேல் மற்றும் அனைத்து மனுக்குலத்திற்கும் பாவம் மற்றும் மரணத்திலிருந்து, இறுதி விடுதலையைக் கொடுக்கும் பெரிய இரட்சகராகிய இயேசுவுக்கும் நிழலாக இருக்கிறார்கள்.

### யோசேப்பு

இஸ்ரயேலின் மீட்பராக யோசேப்பின் ஆயத்தம், 17 வயதில், அவருடைய சகோதரர்களால் அடிமையாக




விற்கப்பட்டபோது தொடங்கியது. ராகேலின் முதல் மகனாகிய யோசேப்பை, யாக்கோபு விரும்பின காரியம், கதிர்கள் மற்றும் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் பற்றிய யோசேப்பின் சொப்பனங்களுடன் சேர்த்து, அவரது மூத்த சகோதரர்கள் அவர் மீது பொறாமையும், விரோதத்தையும் தூண்டியது. (ஆதியாகமம் 37:5-11) அவர்கள் அவரை மீதியானிய வியாபாரிகளுக்கு அடிமையாக விற்று, ஆட்டின் இரத்தத்தால் யோசேப்பின் பல வண்ண ஆடைகளை நனைத்து யாக்கோபிடம் கொண்டு வந்தனர். இஸ்ரயேலும், மனுக்குலத்தையும் இரட்சிப்பவர் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திற்கான அடிப்படையை நிறுவுவதற்கு எவ்வாறு ஒப்புரவாகுதலுக்காக தன் இரத்தத்தைச் சிந்த வேண்டும் என்பதற்கும், எவ்வளவு பொருத்தமான உதாரணமாக இது உள்ளது.


எகிப்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட யோசேப்பு, "பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபாரின் அடிமையானார். (ஆதியாகமம் 37:36) இதே பாணியில், இஸ்ரயேல் மற்றும் மனுக்குலத்தின் பெரிய இரட்சகராகிய கிறிஸ்து, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார், அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:14) லோகோஸ் "தன்னை தான் வெறுமையாக்கி, அடிமையின் ரூபம் எடுத்து... மனித சாயலானார்." (பிலிப்பியர் 2:7) "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக தேவன் பாவமாக்கினார்." (2கொரிந்தியர் 5:21)

ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் முழு மனுக்குலத்திற்கும் பாயும் முன், பாவத்திற்கான ஒரு பலி அதற்கு தேவைப்பட்டது. தேவன் ஆபிரகாமிடம் அவருடைய மகன் ஈசாக்கை மோரியா மலையில் பலி

செலுத்தும்படி கேட்டபோது இக்காரியம் சித்தரிக்கப்பட்டது. (ஆதியாகமம் 22:2-22) லோகோஸ் மனிதனாகிய இயேசுவாக வந்து, பின்னர் தந்தை ஆதாமின் மீட்கும் பொருளாக மரணத்திற்குச் செல்வதை, யோசேப்பு ஒரு அடிமையாகி, பின்னர் சிறைக்குச் சென்றதில் சித்தரிக்கப்படுகிறது.

"கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும் அவன் எஜமான் கண்டு, யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். அவனைத் தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கினது முதற்கொண்டு, கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்..." (ஆதியாகமம் 39:3-5) அதைப் போலவே, தேவன் தம் ஆவி மற்றும் வல்லமையின் மூலம் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது அவருடைய வேலையை வளமாக்கினார். "நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை, என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார். "(யோவான் 14:10) என்று இயேசு கூறினார்.

யோசேப்பின் வெற்றியும் தோற்றமும் போத்திபார் மனைவியின் கண்களைக் கவர்ந்தது. அவள் தொடர்ந்து யோசேப்பை மயக்க முயன்றாள். யோசேப்பு அவளது விருப்பத்தை நிராகரித்து அவள் முன்னிலையில் இருந்து விரைந்தோடினார். (ஆதியாகமம் 39:7-12) பழிவாங்கும்படியாக, யோசேப்பு தன்னை தாக்கியதாக குற்றம் சாட்டினாள். உடனே போர்த்திபார் யோசேப்பை சிறையில் அடைத்தார். (வசனம் 13-20) அதேபோல், மனுஷரின் இரட்சகராக இயேசுவின் பணியிலிருந்து அவரைக் கெடுக்க சாத்தான் பல்வேறு வழிகளையும், தனிநபர்களையும் பயன்படுத்தினான். இதில் தோல்வி அடைந்ததால், அவன் யூதத் தலைவர்களைத் தூண்டிவிட்டு, ரோமானிய அதிகாரிகளுக்கு முன்பாக இயேசுவைக் குற்றம் சாட்டி, சிலுவையில் அறைந்து, அவரை மரணச் சிறையில் அடைத்தான். (சங்கீதம் 142:7, ஏசாயா42:7)




சிறையில் இருந்தபோது யோசேப்புக்கு தேவனுடைய கிருபை அதிகமாக இருந்தது. பானபாத்திரக்காரனும் சுயம்பாகியுமாகிய இருவரின் கனவுகளுக்கு யோசேப்பு விளக்கம் அளித்தார். இதனால் பசுக்கள் மற்றும் கதிர்கள் பற்றிய பார்வோனின் கனவுகளுக்கு யோசேப்பு விளக்கம் அளிப்பதற்காக அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். (ஆதியாகமம் 39:21-41:14) பார்வோனின் கனவுக்கு விளக்கம் அளித்து, அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை பரிந்துரைத்ததினால், யோசேப்பை பார்வோனுக்கு அடுத்தபடியாக உயர்வதற்கு வழிவகுத்தது. "நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய், உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள் - சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றார்." (41:40) இது இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலுக்கான அழகான எடுத்துக்காட்டாகும். தேவன் "அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்தார்." (எபேசியர் 1:20)

பல ஆண்டுகளுக்கு பின், தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட பஞ்சம் வந்தபோது யோசேப்பு தன் சகோதரர்களை காப்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. யோசேப்பு தனது உண்மையான அடையாளத்தை தனது சகோதரர்களிடம் வெளிப்படுத்தியபோது, "பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும் எகிப்து தேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார். " (ஆதியாகமம்

45:7,8) என்று அவர் கூறினார். தேவன் யோசேப்பை அவருடைய குடும்பத்தை விடுவிக்க முன் அவரை அனுப்பியது போல், தேவன் இயேசுவை முன் அனுப்பி, அவரை உயர்த்தினார். எகிப்தில் தனது சகோதரர்களான யூத ஜனங்களுக்கு மட்டுமல்ல, அனைத்து மனுக்குலத்திற்கும் நித்திய தந்தையாக (ஜீவன் கொடுப்பவராக) இருப்பதை குறிக்கிறது. இந்த வழியில், யோசேப்பின் வாழ்க்கை, ஒப்புரவாகுதலை மட்டுமல்ல, உயிர்த்தெழுதல், மறுசீரமைப்பு மற்றும் ஆபிரகாமின் உடன்படிக்கையின் நிறைவேற்றத்தில் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அனைவருக்கும் வழங்கப்படும் ஆவிக்குரிய உணவு ஆகியவற்றை விளக்குகிறது.

## மோசே

தேவன் ஆபிரகாமுக்கு உடன்படிக்கையைக் கொடுத்து நானூற்று முப்பது வருடங்களுக்குப் பின் இஸ்ரயேலை இரட்சிக்க தேவன் மற்றொரு இரட்சகராகிய மோசேயை எழுப்பினார். (ஆதியாகமம் 12:7, யாத்திராகமம் 12:40,41) மோசே முன்பு ஒரு யூத சகோதரனை விடுவிப்பதில் சுயமாக முயற்சித்தார். ஆனால் மோசே தனது உயிருக்காக தப்பி ஓட வேண்டியிருந்தது. (யாத்திராகமம் 2:11-15) நாற்பது வருடங்களுக்கு பின், தேவனுடைய தூதர் எரியும் முற்புதரில் அவருக்கு தரிசனமாகி "நீ இஸ்ரயேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்." (யாத்திராகமம் 3:10) இஸ்ரயேலின் மீட்பராக இருப்பதற்கு தான் தகுதியற்றவர் என்று நான்கு முறை மோசே கூறினார். இறுதியாக, "ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான்." (யாத்திராகமம் 4:13) மோசே தன்னுடைய மாம்சத்தின் படி சிந்தித்து, இவ்வளவு பெரிய பணிக்கு தகுதியற்றவராக உணர்ந்தார். ஆனால் தேவனுடைய ஆதரவான வாக்குறுதிகள் இறுதியில் மோசேயை வற்புறுத்தியது. மேலும், அவர் ஆபிரகாமின் சந்ததியினரை விடுவித்து அவர்களை வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அழைத்துச்செல்ல தேவனுடைய பிரதிநிதியாக எகிப்துக்குத் திரும்பினார்.

இந்த விடுதலை ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் எவ்வாறு இணைக்கப்பட்டது என்பதை தேவன் பின்னர் விளக்கினார். "சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும்




யாக்கோபுக்கும் தரிசனமானேன், ஆனாலும் யெகோவா என்னும் என் நாமத்தினால் நாம் அவர்களுக்கு அறியப்படவில்லை. அவர்கள் பரதேசிகளாய் தங்கின தேசமாகிய கானான் தேசத்தை அவர்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களோடே என் உடன்படிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறேன். எகிப்தியர் அடிமைகொள்ளுகிற இஸ்ரயேல் புத்திரரின் பெருமூச்சையும் நான் கேட்டு, என் உடன்படிக்கையை நினைத்தேன். ஆதலால், இஸ்ரயேல் புத்திரரை நோக்கி நானே கர்த்தர், உங்கள் மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி நான் உங்களை விடுவித்து உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்டு, உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக் கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன், உங்கள் மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள். ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட தேசத்தில் உங்களைக் கொண்டுபோய், அதை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன், நான் கர்த்தர் என்று அவர்களுக்குச் சொல் என்றார்."(யாத்திராகமம் 6 :3-8 வசனங்கள். )

தன் ஜனமாகிய இஸ்ரயேலர்கள் யெகோவா தேவனைச் செவிப்பதற்காக அவர்களைப் போகவிட வேண்டும் என்று பார்வோனிடம் கோருவதில், மோசே தேவனுடைய பிரதிநிதியாக இருந்தார். "அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால் - இஸ்ரயேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன், அவனை

விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்ட புத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல் என்றார்." (யாத்திராகமம் 4:22-23) முதல் வாதைக்கு முன்பே, தேவன் மோசேக்கு அதன் விளைவுகளை முன்னறிவித்தார். இங்கு, பார்வோன் சாத்தானை அடையாளப்படுத்துகிறான். இவன் இந்த மனுக்குலத்தை பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தில் வைத்திருக்கும் தற்போதைய தீய உலகின் தேவனாக இருக்கிறான். அவன் ஒரு கடினமான எஜமான். இஸ்ரயேலர்களைப் போலவே, மனுக்குலம் புலம்புகிறது, உதவிக்காக அழுகிறது. (யாத்திராகமம் 2:23,24) இஸ்ரயேலை அடையாளப்படுத்தும் முழு மனித குடும்பத்தையும் சாத்தான் மற்றும் அடிமைத் தனத்திலிருந்து விடுதலைக்கு வழி நடத்துவதில் தேவனுடைய முகவராகிய இயேசு கிறிஸ்துவை இங்கு மோசே சித்தரிக்கிறார். இதுவே ஆபிரகாமின் உடன்படிக்கையில் வாக்களிக்கப்பட்ட விடுதலை.

கூடுதலாக, தேவன் இஸ்ரயேலுடன் மற்றொரு உடன்படிக்கையை மனதில் வைத்திருந்தார். அதில் அவர்களை தங்கள் இரட்சகரின் ஒரு பகுதியாக இருப்பதற்கு ஆயத்தப்படுத்தவும், எதிர்காலத்தில் அந்த உடன்படிக்கையின் கீழ் மனுக்குலம் ஆசீர்வதிக்கப் படுவதற்கு ஒரு நிழலாகவும் வைத்திருந்தார். "நான் எகிப்தியருக்குச் செய்ததையும் நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள். பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய இராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்று. "(யாத்திராகமம் 19:4-6) தேவன் சீனாய் மலையில் வாக்களித்தார்.

"மோசே வந்து ஜனங்களின் மூப்பரை அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு முன்பாச் சொன்னான். அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தரிடத்தில் தெரிவித்தார். "(யாத்திராகமம் 19:7,8) இஸ்ரயேல் ஜனங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு, மகா பெரிய இரட்சகராகிய இயேசுவின் சரீர அங்கத்தினராகவும், மெல்கிசெதேக்கின் முறையின் படி இராஜாக்களும், ஆசாரியர்களும் ஆவதற்கு, சீனாய் மலையில் தேவன் இஸ்ரயேலருடன் ஏற்படுத்திய நியாயப்பிரமாண உடன்படிக்கை, மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவிடம் அவர்களை வழிநடத்த ஒரு உபாத்தியாராக இருந்தது. (கலாத்தியர் 3:24, எபிரெயர்6:20, 1பேதுரு2:5,9, வெளிப்படுத்தல் 1:6, 5:10

நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராக, மோசே மெல்கிசெதேக்கின் ஆசாரியத்துவத்தின் ஆட்சி பகுதியையும், பிரதான ஆசாரியராகிய ஆரோன் தனது வேலையினால் இந்த ஆசாரியத்துவத்தின் மதப் பகுதியை அடையாளப் படுத்துகிறார். புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவை, மத்தியஸ்தராகிய மோசே அடையாளப் படுத்துகிறார். இவரே மனுக்குலத்திற்கும், தெய்வீக நீதிக்கும் இடையில் நின்று, அவர்கள் பரிசுத்தமான பெரும்பாதையில் மீண்டும் பரிபூரணத்திற்கும் தேவனுடன் இணக்கமாக ஏறி செல்லும்போதும், மனுக்குலத்தைப் பாதுகாப்பவராக இருப்பார். (எபிரெயர் 8:6, 9:15, 12:24) "நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்துச் சுகித்து நீடித்திருக்கும் படி, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்கும் படியாக...." (உபாகமம் 5:33)

மோசே இஸ்ரயேலருக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கற்பனைகளையும், கட்டளைகளையும் கற்பித்தார். ஐயோ, அவர்களோ, ".... எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயத்தை" அவர்களுக்குள் வளர்க்க வில்லை. (வசனம் 29) இதன் விளைவாக, யாத்திராகமம் 19:4-6ல் தேவன் கூறிய இராஜாக்கள் மற்றும் ஆசாரியர்களின் தேசமாக அவர்கள் மாறத் தவறிவிட்டார்கள்.

இதேபோல், இஸ்ரயேல் மற்றும் யூதாவின் வீட்டாருடன் செய்யப்பட்ட புதிய உடன்படிக்கைக்கு தலைமையான சட்டமியற்றிய கிறிஸ்துவை மோசே அடையாளப்படுத்துகிறார். (எரேமியா 31:31-34)

"உன்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன், நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். "(18) "என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்."(19) (உபாகமம் 18:17-19) நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் அவர்களது அனுபவத்தைப் போலன்றி, இஸ்ரயேலர்களும் பொதுவாக மனுக்குலமும், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய கிறிஸ்துவுக்கு செவிசாய்ப்பார்கள். தேவன் கிறிஸ்துவின் மூலமாக, "என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்..... அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." (எரேமியா 31:33-34) மத்தியஸ்தரும், பிரமாணத்தை வழங்குபவருமான கிறிஸ்துவின் கீழ், இஸ்ரயேல் ஆபிரகாமின் வாக்குறுதியின்படி பூமியின் தூளாவார்கள். பூமியின் தூளைப் போல, அவர்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் பரவுவார்கள். (ஆதியாகமம் 28:14)

### யோசுவா

யோசுவா மோசே அந்த நிலையில் இருந்து அகற்றப்பட்டபோது, யோசுவா இஸ்ரயேலின் மூப்பராகவும், வாக்களிக்கப்பட்ட தேசத்தை அதன் தற்போதைய குடிமக்களிடமிருந்து கைப்பற்றுவதற்காக இஸ்ரயேலை வழிநடத்தும் தேவனுடைய முகவராகவும் ஆனார். "என் தாசனாகிய மோசே மரித்துப்போனான், இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரயேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள். ... நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்....பலங்கொண்டு திடமனதாயிரு, இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய்." (யோசுவா1:2,3,6) வாக்களிக்கப்பட்ட தேசமான கானானுக்கு இஸ்ரயேலர்களை வழிநடத்த தேவையான நடவடிக்கை எடுப்பதன் மூலம், நிச்சயமாக, யோசுவா ஆபிரகாமுக்கு வாக்களித்ததை நிறைவேற்றுவதில் உற்சாகமாக இருந்திருப்பார்.

தேவனுடைய வழிநடத்துதலினால், யோசுவா அவர்களை யோர்தான் ஆற்றின் குறுக்கே அழைத்துச் சென்றார். இங்கு, உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்துகொண்டு, ஆசாரியர்கள் ஜனங்களுக்கு முன்பாக யோர்தானைக் கடந்தார்கள். ஆசாரியர்களின் பாதங்கள் யோர்தானைத் தொட்டவுடன், ஆதாமின் நகரம் வரைக்கும் தண்ணீர் குவிந்து, ஜனங்கள் வெட்டாந்தரையில் நடந்து யோர்தானை கடக்க உதவியது. எல்லா ஜனங்களும் யோர்தானைக் கடந்து முடிக்கும் வரை ஆசாரியர்கள் யோர்தானின் நடுவில் உலர்ந்த தரையில் நின்றார்கள். (யோசுவா3:1-4:18) ஆதாமின் கண்டனத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு, ஆயிர வருட ஆசீர்வாதங்களுக்குள் செல்வதை, இராஜரீகமான ஆசாரியத்துவம் முழு மனுக்குலத்திற்கும் தங்கள் ஜீவனையே எப்படி கொடுப்பார்கள் என்பதை இஸ்ரயேலால் எவ்வளவு அழகாக எடுத்துக்காட்டப்படுகிறது. இந்த விடுதலையுடன், மனுக்குலம் ஆயிர வருட ஆசீர்வாதங்களுக்குள் சென்று ஆபிரகாமின் வாக்குறுதியின் ஆசீர்வாதங்களை நிறைவு செய்யும்.

அதன் பின், இஸ்ரயேல் எரிகோவைக் கைப்பற்றியது. இஸ்ரயேல் படைவீரர்களுடன் சேர்ந்து, ஏழு ஆசாரியர்களும் எக்காளங்களை ஊதுவதோடு, உடன்படிக்கைப் பெட்டியை எரிகோவை ஆறு நாட்களும் ஆறு முறை சுற்றி வந்தனர். ஏழாவது நாளில், அனைவரும் அதிகாலையில் எழுந்து, முழு ஊர்வலமாக எரிகோவை ஏழு முறை சுற்றி வந்தனர். "எக்காளங்களை ஊதுகையில், ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள், எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழுங்குகையில்,



அலங்கம் இடிந்து விழுந்தது. உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நேராகப் பட்டணத்தில் ஏறி, பட்டணத்தைப் பிடித்தார்கள்..."(யோசுவா6:20) இந்த நிகழ்வு முழு சுவிசேஷ யுகத்தையும் சித்தரிக்கிறது. இந்த சுவிசேஷ யுகத்தில் ஏழு சபைகளுக்கு ஏழு தூதர்கள் சத்தியத்தின் எக்காளத்தை ஊதினார்கள், பின்னர் அறுவடையில், சத்திய செய்தியும், அதன் விளைவாக வரும் வாதைகளும் இந்த தற்போதைய தீய உலகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் - கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தையும் புதிய உடன்படிக்கையையும் நிறுவுவதற்கு இதுஒரு அவசியமான முன் நிபந்தனையாகும்.

தேசத்தின் குடிமக்கள் பலரைக் கைப்பற்றிய பிறகு, யோசுவா இஸ்ரயேலின் பல்வேறு பழங்குடியினருக்கு நிலத்தை பங்கிட்டு கொடுத்தார். மேலும் லேவியர்களுக்காக நியமிக்கப்பட்ட பட்டணங்களை அடைக்கலப் பட்டணங்களாக வழங்கினார். (யோசுவா13:1-21:45) யோசுவாவின் வாழ்க்கையின் முடிவில், தேவன் எப்படி இஸ்ரயேலை விடுவித்தார் என்றும், ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றினார் என்பதையும் யோசுவாவின் மூலம் சுருக்கமாகக் கூறினார். "நான் நதிக்கு அப்புறத்தில் இருந்த உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமை அழைத்துக்கொண்டு வந்து, அவனைக் கானான் தேசமெங்கும் சஞ்சரிக்கச் செய்து அவன் சந்ததியைத் திரட்சியாக்கி, அவனுக்கு ஈசாக்கைக் கொடுத்தேன்...ஈசாக்குக்கு யாக்கோபையும் ஏசாவையும் கட்டளையிட்டு, ஏசாவுக்குச் சேயீர் மலைத்தேசத்தைச் சுதந்தரிக்கும்படி கொடுத்தேன்... யாக்கோபும் அவன் பிள்ளைகளுமோ எகிப்துக்குப் போனார்கள். நாம் மோசேயையும் ஆரோனையும் அனுப்பி, எகிப்தியரை வாதித்தேன். அப்படி அவர்கள் நடுவிலே நான் செய்த பின்பு உங்களைப் புறப்படப்பண்ணினேன். பின்பு யோர்தானைக் கடந்து எரிகோவுக்கு வந்தீர்கள். எரிகோவின் குடிகளும், எமோரியரும், பெரிசியரும், கானானியரும், ஏத்தியரும், கிர்காசியரும், ஏவியரும், எபூசியரும், உங்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினார்கள். ஆனாலும் அவர்களை நான் உங்கள் கையிலே ஒப்பக்கொடுத்தேன். அப்படியே நீங்கள் பண்படுத்தாத தேசத்தையும் நீங்கள் கட்டாத பட்டணங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகளில் குடியிருக்கிறீர்கள். நீங்கள் நடாத திராட்சைத் தோட்டங்களின் பலனையும் ஒலிவத் தோப்புகளின் பலனையும் புசிக்கிறீர்கள் என்றார். "(யோசுவா 24:3,4,5,11,13)

ஆபிரகாமை ஒரு பெரிய தேசமாக்கி, அவருடைய சந்ததியினருக்கு தேவன் கொடுத்த தேசத்திற்கு அழைத்துச் செல்வேன் என்ற தேவனுடைய வாக்குறுதி நிறைவேற்றப்படுகையில், யோசேப்பு, மோசே மற்றும் யோசுவா ஆகியோரால் நிழலாக காட்டப்பட்ட, பெரிய இரட்சகரால் இவைகள் நிறைவேறும். "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து...உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன்....அதனால் உன் சந்ததியில் (கிறிஸ்துவுக்குள்) பூமியிலுள்ள எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதியாகமம் 12:2,7, 22:17,18, கலாத்தியர் 3:16)

**தாவீது, சாலொமோன், எலியா, எலிசா**

# இராஜாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுக்கான வாக்குறுதி

*Jim Parkinson*

"அப்பொழுது சாலொமோன்.... தேவனாகிய கர்த்தாவே, நீர் அபிஷேகம் பண்ணினவனின் முகத்தைப் புறக்கணியாமல், உம்முடைய தாசனாகிய தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணின கிருபைகளை நினைத்தருளும் என்றான்." (2நாளாகமம் *6:1, 42*)

ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையில் தேவன் காட்டிய அன்பான இரக்கம் அல்லது கருணை, இஸ்ரயேலின் பெரிய இராஜாக்களுக்கும், அவருடைய ஊழியக்கார்களான தீர்க்கதரிசிகளுக்கும் பன்னிரெண்டு தலைமுறைகளுக்குமேல் நீடித்தது. முதலில் தாவீதைக் கவனிக்கலாம். அவருடைய பலம் மற்றும் பலவீனங்கள் இரண்டும் அனைவருக்கும் தெரியும்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

## தாவீது

பல சந்தர்ப்பங்களில் தாவீது தனது எதிரிகளிடம் அசாதாரண கருணை காட்டினார் :-

(1) இராஜாவாகிய சவுல் தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவர், ஆனால் அவர் தாவீது மீது ஒரு கொடிய ஈட்டியை எறிந்தார். பின்னர் சவுல் இராஜாவைக் கொல்ல தாவீதுக்கு வாய்ப்பு கிடைத்தபோது, அவர் செய்யவில்லை. அதற்குப் பதிலாக அவர் ஆதாரத்திற்காக சவுலின் அங்கியின் ஒரு பகுதியை வெட்டி எடுத்தார். (1சாமுயேல் 18:10- 11, 19:2, 9-12, 24:1-22)


(2) சவுல் மீண்டும் தாவீதை வேட்டையாடினார். ஆனால் சவுலும் அவரது ஆட்களும் தூங்கும் வரை தாவீது காத்திருந்து, சவுலின் மேல் இரக்கம் பாராட்டுவதற்கு ஆதாரமாக, பிறகு சவுலின் ஈட்டியையும் தண்ணீர்ச் செம்பையும் எடுத்துச் சென்றார். (1சாமுயேல் 26:1-25)

(3) இராஜாவாகிய சவுல் போரில் கொல்லப்பட்டர், ஆனாலும் தாவீது தேவனால் அபிஷேகம் செய்யப்பட்ட அவருக்காக துக்கம் அனுசரித்தார். (2சாமுயேல் 1:1-16)

(4) சவுலின் குமாரனான இஸ்போசேத்தின் தளபதியாக அப்னேர் இருந்தார். அவர் தாவீதுக்கு முழு இராஜ்யத்தையும் கொடுக்க வந்தார். ஆனால், ஒரு பகையின் காரணமாக தாவீதின் சகோதரியின் குமாரன் அவரை கொன்றான். இருப்பினும், தாவீது அப்னேருக்காக துக்கம் அனுசரித்தார். (2சாமுயேல் 3:31-37) அதேபோல், தாவீதின் அரியணைக்குப் போட்டியாக இருந்த இஸ்போசேத்தின் மரணத்திற்காக தாவீது துக்கம் அனுசரித்தார். (2சாமுயேல் 4:9-11)

(5) தாவீதின் குமாரன் அப்சலோம் அரியணையை தனக்கே எடுத்துக் கொண்டான். தாவீது தப்பியோடிய போது, சீமேயி அவர் மீது கற்களையும், சேற்றையும் வீசினான். ஆனால் தாவீது வெற்றிபெற்று திரும்பிய போது, தேவன் தந்த வெற்றியின் நாளை அவர் கெடுக்காமல் சீமேயிக்கு இரக்கம் காட்டினார். (2சாமுயேல் 16:11-12, 19:22-23)

(6) அப்சலோம் தாவீதிடம் இருந்து அதிகாரத்தைக் கைப்பற்றி, அவரைக் கொல்ல முயன்றான். ஆனால் அவருடைய மகன் அப்சலோமை மென்மையாக நடத்தவேண்டும் என்று தாவீது கண்டிப்பான உத்தரவிட்டார். யோவாப் அப்சலோமைக் கொன்றபோது, தாவீது அவனுக்காக வருந்தினான். (2 சாமுயேல் 18:5, 33, 19:4)



*David was first anointed when he was young.*

தாவீது மூன்று பெரிய பாவங்களைச் செய்தார் : (1) விபச்சாரம் (பத்சேபாலுடன்) (2) உரியாவின் மரணத்தைத் திட்டமிட்டார். (3) போருக்காக ஜனங்களை எண்ணினார் - தேவனுடைய வல்லமையை விட, தனது சொந்த பலத்தை கணக்கிட்டார். (2சாமுயேல் 11:3,15, 24:1-8) ஆனால் ஒவ்வொன்றுக்காகவும் அவர் வருந்தினார். (2சாமுயேல் 12:13, 24:10-17)

மொத்தத்தில் மூன்று பெரிய பாவங்களுக்கு அவர் மிகவும் வருந்தினார். ஆனால் ஆறு முறை அவர் மற்றவர்களிடம் அசாதாரணமான கிருபை காட்டினார். நம்முடைய எதிரிகள் மீது இவ்வளவு அன்பு இருக்கிறதா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வோம். (மத்தேயு 5:44) இவ்விதமாக தாவீது தேவனுடைய இருதயத்திற்கு பிரியமான தாசனாக இருந்தார். (1சாமுயேல் 13:14, அப்போஸ்தலர் 13:22) கேள்வி : நானும் இப்படியா?

## தாவீதின் மூன்று அபிஷேகங்கள்

தாவீது மூன்று முறை அபிஷேகம் செய்யப்பட்டார். தாவீது இளைஞனாக இருந்தபோது, அதாவது அவர் இராஜாவாக ஆவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பு சாமுயேல் அவரை அபிஷேகித்தார். (1சாமுயேல் 16:11-13) சவுல் மற்றும் யோனத்தான் இறந்த பின், யூதாவின் ஜனங்கள் தாவீதை யூதாவின் குடும்பத்தின் மீது இராஜாவாக அபிஷேகித்தார்கள். (2சாமுயேல் 2:1-4) சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் அவனுடைய சொந்தத் தளபதிகளால் கொல்லப்பட்ட பின், இஸ்ரயேலின் எல்லா கோத்திரங்களும் தாவீதை சமஸ்த இஸ்ரயேலின் மேல் இராஜாவாக அபிஷேகித்தார்கள். (2சாமுயேல் 5:1-4) இவ்வாறு தாவீது நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிழலாக இருக்கிறார். இயேசு தனது முதல் வருகையில் மேசியாவாக அபிஷேகம் செய்யப்பட்டார், அதாவது அவருடைய ஆட்சி தொடங்குவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பு. அவர் திரும்பி வந்த போது, அவர் தங்கள் ஜீவ பலியின் ஓட்டத்தை முடித்த விசுவாசமுள்ளவர்களை உயிர்ப்பித்து, அவர்களை ஆட்சி செய்ய தொடங்கி விட்டார். உண்மையுள்ள சபையாகிய மணவாட்டி, முழுமை அடைந்தபின், தற்போதைய தீய உலகம் அழிக்கப்படும் போது, இந்த முழு உலகமும், இராஜாவாகிய இயேசுவால் ஆசீர்வதிக்கப்படும். (அவருடைய மணவாட்டியோடு) பூமியின் முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும் ஆபிரகாமின் வித்தின் வளர்ச்சி , இவ்வாறாக காட்டப்படுகிறது.

தாவீது இயேசுவை அடையாளப்படுத்துகிறார். இயேசு 30 வயதில் தனது ஊழியத்தை ஆரம்பித்தது போலவே, தாவீது இராஜாவானபோது அவருடைய வயது 30 என்று பரிந்துரைக்கப்படுகிறது. (2சாமுயேல் 5:4-5, 1இராஜாக்கள் 2:11 , 1நாளாகமம் 29:27, லூக்கா3:23) கிறிஸ்து மற்றும் சபையில் காணப்படவேண்டிய இரக்கம் தாவீதில் காணப்படுகிறது. அதே சமயம் சபை மட்டுமே அவருடைய பலவீனங்களை அடையாளப்படுத்துகிறது. தாவீதின் 40 வருட ஆட்சியானது, நித்திய ஆசாரியத்துவம் பயிற்றுவிக்கக்கூடிய சுவிசேஷ யுகத்தின் காலத்தை மாதிரியாக காட்டுகிறது. அதாவது உலகம் முழுவதும் ஜீவனுக்கும், மனித பூரணத்திற்கு திரும்பக்கூடிய ஆயிரவருட யுகத்திற்கு முன் நடைப்பெறக்கூடியது. தாவீது யூதாவை ஏழு வருடங்கள் ஆறு மாதங்கள் ஆட்சி செய்தார். இந்த ஏழு ஆண்டுகள் சுவிசேஷ யுகம் பிரிக்கப்பட்டிருக்கும் ஏழு காலகட்டங்கள் என்று பரிந்துரைக்கப்படுகிறது. (எ.கா. வெளிப்படுத்தல் 2-3 அதிகாரங்கள்)

ஒருவேளை கூடுதலான அந்த ஆறு மாதம் (வசந்த காலம் அல்லது கோடைக்காலம் வரை) சபை முடிந்த பின் வரும் காலகட்டம் என்று கருதப்படுகிறது. அந்த காலப் பகுதியில் சேதமடைந்த உலகம் கிறிஸ்துவின் இராஜ்யத்துடன் இணக்கமாகலாம். (சகரியா14:16-21, 2சாமுயேல் 2:11)

## சாலொமோன்

இராஜாவாகிய தாவீதின் முடிவு நாட்களில், சாலொமோனின் ஒன்றுவிட்ட சகோதரன் அதோனியா,



அரியணையைக் கைப்பற்ற முயற்சித்தான். இருப்பினும், தாவீதின் ஞானத்தால், வாக்குறுதியளித்தபடி சாலொமோன் இராஜாவானார். (1இராஜாக்கள் 1) என்ன வேண்டும் என்று தேவன் சாலொமோனிடம் கேட்டபோது, சாலொமோன் நீண்ட ஆயுளையோ, செல்வத்தையோ, அதிகாரத்தையோ கேட்காமல், உணர்வுள்ள இருதயத்தையும், ஞானத்தையும் கேட்டார். (1இராஜாக்கள் 3:4-13) சாலொமோன் கேட்டதை தேவன் அவருக்கு அளித்தார், பின்னர் அதோடு, செல்வத்தையும், அதிகாரத்தையும் கூட்டி வழங்கினார். இதன் விளைவாக, அவரது நாற்பது ஆண்டுகால ஆட்சி அமைதியாக இருந்தது.

அவருடைய தந்தை தாவீது இராஜா செய்த ஆயத்தங்களைத் தொடர்ந்து, அந்த ஆலயத்தை கட்டுவதே அவருடைய சிறந்த பணியாக இருந்தது. அதை ஏழு வருடங்களில் கட்டி முடித்தார். அதாவது சாலொமோனின் 4ம் வருடத்தில் இருந்து 11ம் வருடம் வரைக்கும். உண்மையான காலப் பகுதி ஆறு ஆண்டுகளும், ஆறு மாதங்கள் ஆனது. ஆனால் அந்த காலம் ஏழாவது புதிய ஆண்டை கடந்ததால், அது ஏழு ஆண்டுகளாகக் கணக்கிடப்படுகிறது. ஏழு என்ற எண்ணின் எபிரெய பதம், ஷெபா. இதற்கு "சத்திய பிரமாணம்" என்றும் பொருள். இது ஆலயத்தின் கட்டுமானத்தை ஆதியாகமம் 22:16இல் ஆபிரகாமுக்கு யெகோவா தேவன் செய்து கொடுத்த வாக்குத்தத்தத்திற்கு உட்பட்ட உடன்படிக்கையுடன் இணைக்கிறது. இந்த உடன்படிக்கை சுவிசேஷ யுகத்தின் ஏழு நிலைகளில் நிறுவப்பட்ட சபை வகுப்பின் மூலம் நிறைவேற்றப்படும்.

ஆலயம் 8வது மாதம் (1இராஜாக்கள் 6:38)வரை கட்டி முடிக்கப்படவில்லை என்றாலும் அது 7 ம் மாதத்தில் (1இராஜாக்கள் 8:1-11) பிரதிஷ்டை செய்யப்பட்டதை நாம் கவனிக்கவேண்டும். சபை நிறைவடைந்த பின், அது முழுமையாக செயல்படுவதற்கு முன் உள்ள இடைப்பட்ட காலகட்டத்தை இது குறிக்கலாம். இதேபோல், வெளிப்படுத்தல் 15:5-8இல், சபை நிறைவடைவதற்கு முன்பே ஆலயம் பிரதிஷ்டைச் செய்யப்பட்டது. (வெளிப்படுத்தல் 16:17 காண்பிக்கப்பட்டது போல)



Elijah, fed by ravens

சாலொமோனின் ஆலயம் பிரதிஷ்டைச் செய்யப்பட்டபோது, "மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்கிறதற்கு நிற்கக் கூடாமற் போயிற்று, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. வெளிப்படுத்தல் 15:8லில், "தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது. ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும் வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக்கூடாதிருந்தது." புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை வழங்குவதற்கு, புதிய ஆசாரியத்துவத்திற்கு நித்திரையில் இருந்த பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் போதுமானதாக இல்லை என்பதை இது அடையாளமாக காட்டுகிறது. ஏழு வாதைகள் சாத்தானின் சாம்ராஜ்யத்தை வீழ்த்த வேண்டும்.

சாலொமோன் இராஜாவுக்கு 700 மனைவிகள் இருந்தனர், அவர் சமாதானமாக ஆட்சி செய்தார். மேலும் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் பூமியின் எல்லா இராஜாக்களையும் மிஞ்சினார். (1இராஜாக்கள் 10-11) இந்த விஷயங்கள் கிறிஸ்துவின் மகா பெரிய ஆயிர வருட ஆட்சியின் மாதிரியாக இருந்தது. அப்போது, பூமியிலுள்ள எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். சாலொமோனின் திரளான மனைவிகள் 1,44,000 பேர் கொண்ட இயேசுவின் மணவாட்டிக்கு அடையாளப் படுத்தப்படுகிறார்கள். (வெளிப்படுத்தல் 14:1, 19:7-8) உயிர்த்தெழுதலின் போது, பூமிக்குரிய பிள்ளைகளுக்கு இயேசு நித்திய ஜீவனை கொடுத்து, அவர்களுக்கு அவர் "நித்திய பிதா" அல்லது "நித்திய ஜீவனை கொடுக்கும் தந்தை" என்ற பெயரை பெறுவார். சாலொமோன் என்ற பெயருக்கு, "சமாதானம்" என்று அர்த்தம், இயேசுவும் "சமாதான பிரபு" என்று சித்தரிக்கப்படுகிறார். (ஏசாயா

9:6) சாலொமோனின் ஐசுவரியமும் ஞானமும் நம்முடைய ஆண்டவரின் உயர்ந்த நிலையில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே குறிப்பிடுகிறது. "ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரரா யிருக்கிறார் என்று சொன்னார்கள்." (வெளிப்படுத்தல் 5:12)

## சவுல், தாவீது மற்றும் சாலொமோன்

சவுல், தாவீது மற்றும் சாலொமோன் ஆகிய இராஜாக்கள் தலா நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்தனர். இவர்கள் மட்டுமே பிரிக்கப்படாத இராஜ்யத்தை ஆட்சி செய்த ஒரே இராஜாக்கள். (அப்போஸ்தலர் 13:21, 2சாமுயேல் 5:4, 1இராஜாக்கள் 11:42) இந்த மூன்று ஆட்சிகளும், ஆபிரகாமுக்கு யெகோவா தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உள்ள மூன்று பெரிய யுகங்களை மாதிரியாகக் காட்டுகின்றது. சவுல் இராஜா நன்றாகத் தொடங்கினார் ஆனால் அவர் தடுமாறி, இறுதியில், தேவனால் நிராகரிக்கப்பட்டார். அவருடைய ஆட்சி யூத யுகத்தை நன்கு சித்தரிக்கிறது. இந்த யுகம் யூத தலைமை, தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைப்படுவதற்கு ஊக்குவித்ததோடு முடிவுக்கு வந்தது. தாவீது இராஜாவுக்கு நல்ல இருதயம் இருந்தது. பின்னர் அவர் தடுமாறினாலும், ஒவ்வொரு முறையும் அவர் மனம் வருந்தி திரும்பினார். அவருடைய ஆட்சியானது நற்செய்தி யுகத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது. இது வரும் யுகத்திற்கு, விசுவாசமுள்ள ஆனால் இன்னும் பாவத்தில் உள்ள சபையை பயிற்றுவிக்கிறது. சாலொமோன் இராஜா




எல்லா இராஜாக்களை விட ஞானமுள்ளவராக இருந்தார். மேலும் சமாதானமும் செழுமையாயும் ஆட்சி செய்தார். இவ்வாறு அவருடைய ஆட்சியானது கிறிஸ்துவின் 1000 வருட ஆட்சியையும், மறுசீரமைப்பின் யுகத்தையும் நன்கு எடுத்துக்காட்டுகிறது.

இப்படியாக, அடுத்தடுத்து வரும் மூன்று யுகங்களில், தேவனுடைய திட்டம் முன்னேறி, ஆபிரகாமுடனான உடன்படிக்கையின் இறுதியில் நிறைவேற வழிவகுத்தது. யூத யுகத்தில், யெகோவா தேவனால் கொடுக்கப்படட பிரமாணங்கள், ஜனங்கள் பாவம் செய்து மரிப்பது ஆதாமின் தவறு மட்டும் அல்ல என்பதையும், ஜனங்கள் தங்களை மாற்றிகொள்ள வேண்டும் என்பதையும் காட்டியது. சுவிசேஷ யுகம், ஆபிரகாமின் சந்ததியை வளர்க்கக்கூடியது. இது பூமியின் முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும். இறுதியாக ஆயிரம் வருட ஆட்சியின் யுகத்தில் மீண்டும் உலகம் பயிற்றுவிக்கப்பட்டு, ஏதேனில் இழந்த பரிபூரணத்திற்கு ஜனங்களை மீட்டெடுக்கும்.

## எலியா

எலியாவின் வாழ்க்கையில் எட்டு அற்புதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. (1)வறட்சியின் போது எலியா அழைக்கப்பட்டார். (1இராஜாக்கள் 17:1, யாக்கோபு 5:17) (2) கேரீத் ஆற்றண்டையில் காகங்களால் போஷிக்கப்பட்டார். (3) சாரிபாத் விதவையின் வீட்டில் உணவு குறையவில்லை. (17:16) (4) மரித்து போன விதவையின் மகன் எழுப்பப்பட்டான்.( 17:17-24) (5) கர்மேல் பர்வதத்தில் 450 பொய் தீர்க்கதரிசிகளுக்கு எதிரான போட்டியில் எலியா வெற்றி பெற்றார். (18:19-40) (6) 3½ வருட வறட்சிக்கு பின் எலியா மழைக்கு அழைப்பு விடுத்தார். (18:41,யாக்கோபு 5:18) (7) ஒரு தூதன் அவருக்கு உணவளித்தார். (8) எலியா யோர்தான் நதியை அடித்து அதை பிரித்தார். (2இராஜாக்கள் 2:8) இந்தச் சம்பவங்களில் பெரும்பாலானவை (அல்லது அனைத்தும்) ஆபிரகாமின் சந்ததி உருவாகும் சுவிசேஷ யுக நிகழ்வுகளை மாதிரியாகக் கொண்டுள்ளது. எலியாவும் கூட ஒரு பெரிய மாதிரியாக இருக்கிறார். "இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா

தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான் " இத்துடன் பழைய ஏற்பாடு முடிவடைகிறது.(மல்கியா4:5-6) சுவிசேஷ யுகத்தில், விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்காக மட்டுமே யோவான் ஸ்நானகன் இந்த எலியாவின் வேலையை நிறைவேற்றினார். "நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்."(மத்தேயு 11:14, 17:10-13) உலகின் மற்ற பகுதிகளுக்கு, விசுவாசமுள்ள சபை கிறிஸ்துவின் இராஜ்யத்தை அறிவிக்கக்கூடிய எலியாவின் வேலையைச் செய்யும். "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொன்னது..." (ஆதியாகமம் 22:18) அப்போது நிறைவடையும்.

## வெளியே வருவதற்கான அழைப்புகள்

எலியா தீர்க்கதரிசனமாக உரைத்த 3½ வருட வறட்சி, தானியேல்12:7, வெளிப்படுத்தலில் 11:2-3, 12:14, சொல்லப்பட்ட கால அளவின்படி, 3½ காலங்கள் அல்லது 42 மாதங்கள் அல்லது 1260 நாட்கள் என்று புரோட்டஸ்டன்டுகளால் புரிந்து கொள்ளப்பட்டது. ரோமானிய போப் கி.பி 538ல் ரோமிலும், கி.பி 539ல் இத்தாலி முழுவதிலும் அரசாங்கத்தின் ஆட்சியாளராக ஆனதிலிருந்து, கி.பி 1798 ல் போப் ரோமில் இருந்து துரத்தப்பட்டு 1799 ல் பிரான்சில் இறந்த காலம் வரை 1260 வருடங்கள், மேலே சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறியதை அவர்கள் அறிந்துகொண்டனர். (அதற்கு பின் போப்பின் வாரிசாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அனுமதி இல்லாமல் போனது.) இந்த அங்கீகாரம் கிரேட் பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் ஆண்டவரின் இரண்டாம் வருகையின் இயக்கங்களைத் தூண்டியது. (குறிப்பாக 1828 -1829 இல் அல்பரி தீர்க்கதரிசன மாநாட்டு நடவடிக்கைகளின் வெளியீட்டில் தொடங்கியிருக்கலாம்.) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், அதன் விளைவாக வரும் அழைப்பையும் விசுவாசிகள் அங்கீகரிப்பதற்கு இந்த இயக்கம் தேவையான ஆயத்தமாக இருந்தது. "பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது - என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்."(வெளிப்படுத்தல் 18:4)

எலியாவின் வாழ்க்கையின் கடைசி நாட்கள் இன்று நமக்கு அறிவுறுத்தலாக இருக்கலாம். "கர்த்தர் எலியாவைச் சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் போகிறபோது, எலியா எலிசாவோடே கூடக் கில்காலிலிருந்து புறப்பட்டுப்போனான்." (2இராஜாக்கள் 2:1) பெத்தேலுக்குப் போகும்படி எலியாவை யெகோவா தேவன் அழைத்தார், எலிசாவும் அவருடன் சென்றார். எரிகோவுக்குப் போகும்படி எலியாவை தேவன் அழைத்தார், எலிசாவும் அவருடன் சென்றார். பின்பு யோர்தானுக்கு செல்லும்படி எலியாவை யெகோவா தேவன் அழைத்தார். எலிசாவும் அவருடன் சென்றார். "கடைசி நாளில்" அவளுடைய பாவங்களுக்கு உடன்படாதபடிக்கு

விசுவாசமுள்ள சபை "பாபிலோனை விட்டு" வெளியே வர அழைக்கப்பட்டது, ஆனால் நாம் வெளியே வந்து மீண்டும் அவளது பாவங்களில் பங்குகொண்டால், விசுவாசிகள் பாபிலோனை விட்டு வெளியே வரவேண்டிய அவசியம் இல்லையே. (ஆதியாகமம் 19ல் லோத்து சோதோமிலிருந்து அழைக்கப்பட்ட போது அவர் சோவாருக்கு சென்றது போல இதுவும் இருக்கிறது. ஏனெனில் அவர் சோவாரையும் விட்டு வெளியேற வேண்டியருந்தது.) நாம் மீண்டும் பாபிலோனின் பாவங்களைச் செய்தால், விசுவாசிகள் பாபிலோனில் இருந்து வெளியே வர அழைக்கப்பட மாட்டார்களே. (எலியா எரிகோவை விட்டு வெளியேறியபோது, அதற்கு பின் போவதற்கு வேறு எந்த பட்டணமும் இல்லை. இது பூமியில் உள்ள விசுவாசமுள்ள சபையின் கடைசி கட்டத்தில், ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தவும், கிறிஸ்துவின் மீட்கும் பொருளைப் பற்றியும், பூமியின் மேல் அவருடைய வரக்கூடிய ஆயிர வருட இராஜ்யத்தைப் பற்றியும் உலகத்திற்கு சாட்சி கொடுப்பதற்கும்

மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றுவது கடினமாக இருக்கலாம் என்று அறிவுறுத்துகிறது.) அனுபவங்கள் எதுவாக இருந்தாலும், அவை உலகின் எல்லாக் குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வேண்டிய ஆசாரியத்துவத்தின் பயிற்சிக்கானவை. (ஆதியாகமம் 12:3)

எலியாவின் வாழ்க்கை எப்படி முடிந்தது என்பதைக் கவனிக்கலாம். அக்கினி இரதங்களும், குதிரை வீரர்களும் எலியாவையும், எலிசாவையும் பிரித்தபோது, ஒரு சுழல்காற்று எலியாவை வானத்தை நோக்கி மேலே கொண்டு சென்றது. உண்மையுள்ள சபை பரலோக உயிர்த்தெழுதலை பெறும் என்பதை இது அடையாளமாக காட்டுகிறது.

**எலிசா**

எலிசா செய்த பதினாறு அற்புதமான செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அவர் மரித்தபின் ஒரு அற்புதத்தை உட்பட). (1) எலிசா திரும்பி வரும்போது, யோர்தானை அடித்து, அதை இரண்டாக பிரித்தார். (2இராஜாக்கள் 2:14) (2) எரிகோவின் கசப்பான தண்ணீரை அவர் குணப்படுத்தினார். (2:21) (3) தன்னை கேலி செய்த இளைஞர்களை அவர் கண்டித்தபோது, கரடிகள் அவர்களை காயப்படுத்தியது. (2:24) (4) வறண்ட அகழிகளில் எலிசா தண்ணீர் நிரப்பினார். (3:17-20) (5) ஒரு தீர்க்கதரிசியின் விதவைக்கு எண்ணெய் குறையாதபடி செய்தார். (4:1-7) (6) ஒரு சூனேமியாள் மற்றும் வயது சென்ற அவளுடைய கணவருக்கும் ஒரு வருடத்தில் ஒரு மகன் பிறப்பான் என்று எலிசா முன்னறிவித்தார். (4:16-17) (7)மரித்து போன சூனேமியாளின் மகனை அவர் திரும்ப ஜீவனுக்கு கொண்டுவந்தார். (4:32-36) (8) விஷம் கலந்த கூழ் பானையின் நச்சை நீக்கினார். (4:40-41) (9)இருபது வார்கோதுமை அப்பங்களைக் கொண்டு நூறு பேருக்கு உணவளித்தார். (4:42-44) (10) எலிசா சிரியாவின் தளபதியான நாகமானை குணப்படுத்தினார். (5:10-14) (11) கேயாசி பாவம் செய்ததினால், எலிசா அவனைத் குஷ்டரோகி ஆக்கினார். (5:27) (12) வேகமாக ஓடும் யோர்தான் நதியில் இருந்து கடன் வாங்கிய ஒரு கோடாரி தலையை எலிசா மீட்டார். (6:1-7)(13) அவர் இஸ்ரயேலின் இராஜாவுக்காக சிரியா இராணுவத்தை உளவு பார்த்தார். (6:9-10) (14) இஸ்ரயேலர்களுக்கு எதிராக வந்த சிரியா இராணுவத்தை அவர் குருடாக்கினார். (6:18-19) (15) சமாரியாவின் பஞ்சம் முடிவடைந்த மறுநாள் ஏராளமான உணவு கிடைக்கும் என்று எலிசா உறுதியளித்தார். (7:1-20) (16) எலிசா மரித்தபின், அவருடைய எலும்புகளின் மேல் ஒரு இறந்த மனிதன் தூக்கி எறியப்பட்டபோது, அவன் மீண்டும் உயிர் பெற்றான். ( 13:21) இந்த சம்பவங்கள் பூமியில் உள்ள சகல தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும் போது, ஆயிரமாண்டு காலத்தில் நிகழ்வுகளைக் குறிப்பிடுகின்றது.

## ஏசாயா, மீகா, யோவேல், ஆமோஸ்

# வார்த்தைகள், ஜீவன் மற்றும் வேலை

"கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள், நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள், சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்." (ஏசாயா*35:10*)

*Len Griehs*

கல்தேயர்களின் தேசமாகிய ஊரிலிருந்த ஒரு புதிய தேசத்திற்கு வருவதற்கான தேவனுடைய அழைப்புக்கு ஆபிராம் கீழ்ப்படிந்தபோது, அவருடைய மனப்பூர்வமான கீழ்ப்படிதலினால், பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு வழிநடத்தப்படுவார்கள் என்று தேவன் அவருக்கு வாக்குறுதி அளித்தார். (ஆதியாகமம் 12:3) ஏறக்குறைய 2000 வருடங்களுக்குப் பிறகு, மத்தேயுவின் சுவிசேஷத்தில் இயேசுவை ஆபிரகாமுடன் தனிப்பட்ட முறையில் தொடர்புப்படுத்தியது. "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு.." (மத்தேயு1:1)

இயேசு தனது அழைப்புக்கு உண்மையுள்ளவராக நிரூபித்தார், மேலும் அவருடைய கீழ்ப்படிதலின் மூலம் இந்த நிபந்தனையற்ற வாக்குறுதியின் வெற்றிக்கு அவர் திறவுகோலானார். "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆதியாகமம் 22:18) இயேசு தாவீதின் சிங்காசனத்தைப் பெற்று, தேவனுடைய இராஜ்யத்தை அதன் தலைநகரமான இஸ்ரயேலில் இருந்து ஆட்சி செய்வார். (2சாமுயேல் 7:12, 13)

இயேசுவின் பிறப்பு, ஊழியம் மற்றும் பலியின் மரணம், ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தை முத்திரிக்கப்பட்ட அதே வேளையில், யூத விசுவாசிகளின் நலனுக்காக, தேவன் பழைய ஏற்பாடு முழுவதும் மதிப்புமிக்க நுண்ணறிவுகளையும், ஊக்கத்தையும் வழங்கினார். தேவனுடைய வார்த்தைகளை நோக்குபவர்களுக்கு, ஏசாயா, மீகா யோயேல், மற்றும் ஆமோஸ் ஆகியோரின் வார்த்தைகள், வாழ்க்கை மற்றும் வேலைகள் ஆகியவை மகிழ்ச்சியான எதிர்காலத்தைப் பற்றிய காட்சியை எவ்வாறு வழங்குகின்றன என்பதை நாம் கவனிப்போம்.

### ஏசயா - ஒப்புரவாக்குதல்

"சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார், அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும். சகல ஜனங்கள் மேலுமுள்ள முக்காட்டையும், சலக ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலையும், இந்த மலையிலே அகற்றிப்போடுவார். அவர் மரணத்தை ஜெயமாய் விழுங்குவார். கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து தனது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார். கர்த்தரே இதைச் சொன்னார். அக்காலத்திலே - இதோ, இவரே நம்முடைய தேவன், இவருக்காக காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார், இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம், இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்."(ஏசாயா25:6-9)

இந்த அருமையான வார்த்தைகள் ஏசாயா35:10, 65:17-25 மற்றும் 11:6-9 ஆகியவற்றில்



மேம்படுத்தப்பட்டுள்ளது. தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே வாக்களிக்கப்பட்ட ஒப்புரவாகுதலின் முடிவை அவை விவரிக்கின்றது.

இயேசுவின் வாழ்க்கை, பலி, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை "இரட்சிப்பின் பொறி இயந்திரமாக" மாறி, பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்காக, ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும். ஆனால் முதலில் இஸ்ரயேலை மீண்டும் ஒரு தேசமாக கூட்டிச்சேர்ப்பதாக தேவன் வாக்களித்திருக்கிறார். அதற்கு பின், தேவனுடைய நீதியுள்ள இராஜ்யத்திற்கு வருவதற்கு தடையாக இருக்கும் மற்ற எல்லா தேசங்களையும் அவர் அகற்றுவதாக வாக்குறுதி அளித்தார். (ஏசாயா1:21-31, எரேமியா30:11) யெகோவா தேவனின் ஆசீர்வாதங்களின் கீழ் செழிக்க ஆயத்தமாக இருக்கும் மறுசீரமைக்கப்பட்ட உலகின் விவரத்தோடு, இந்த செயல் முறையின் முக்கிய கூறுகளில் ஒன்றை வெளிப்படுத்தல் 21ம் அதிகாரம் வழங்குகிறது. "மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன், அது இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார், அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது."(வெளி21:3,4)

இந்த வேத பகுதியை இறுதி ஊர்வலங்களில் படித்தாலும், அதன் உண்மையான தாக்கங்களை சிலர் மட்டுமே புரிந்துகொள்கிறார்கள். மனுக்குலம் பாவமில்லாமல், தேவனுடைய நீதியுள்ள இராஜ்யத்தின் சட்டங்களுக்கு இசைவாக வரும்போது துக்கமும் வேதனையும் முழுமையாக நீக்கப்பட்டு, மனுக்குலத்தின் சிருஷ்டிகருடனான குமாரத்துவம் நிச்சயமாக மீட்டெடுக்கப்படும்.



"உயிர்ப்பிக்கும் ஆவியானவராக" உயிர்த்தெழுந்தபோது, இயேசு "இரண்டாம் ஆதாமானார்" (1கொரிந்தியர் 15:45-48) மேலும் ஆதாமின் கீழ்ப்படியாமையில் இழந்த அனைத்தையும் மீட்டெடுக்கும் வல்லமையை அவர் பெற்றார். "எதிர்காலத்தின் தந்தை"என்று ஏசாயாவால் விவரிக்கப் படுகிறார். (ஏசாயா9:6) இயேசுவும் அவருடைய சபையும் ஆதாமின் முழு சந்ததியையும் எழுப்பி,(அப்போஸ்தலர் 24:15) அவர்கள் நீதியைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவார்கள். மறுசீரமைக்கப்பட்ட மனுக்குலம் நம்முடைய பரலோகத் தகப்பனின் உண்மையான தன்மையைப் புரிந்து கொண்டு, அவர்களின் இறுதி விசுவாசப் பரீட்சைக்குப் பின் (கீழ்ப்படிதல்) மீண்டும் மனுஷர் மத்தியில் யெகோவா தேவன் "வாசம் செய்வார்".

உயிர்த்தெழுப்பப்பட்ட கோடிக்கணக்கான மனுஷர்களுக்குக் கொடுக்கப்படும் அர்ப்பணிப்புக்கான (நீதிக்கான) யெகோவா தேவனின் அழகான அழைப்பை இதோ -"ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள், பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள், நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள். கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும், தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன். இதோ

அவரை ஜனக்கூட்டங்களுக்குச் சாட்சியாகவும், ஜனங்களுக்குத் தலைவராகவும் அதிபதியாகவும் ஏற்படுத்தினேன்." (ஏசாயா55:1-4)

## மீகா-இஸ்ரயேல் உயர்ந்து முக்கியத்துவம் பெறும்

"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் - அந்நாளிலே நான் நொண்டியானவளைச் சேர்த்து, தள்ளுண்டவளையும் தீங்கு அனுபவித்தவளையும் கூட்டிக்கொண்டு, நொண்டியானவளை மீதியான ஜனமாகவும், தூரமாய்த் தள்ளுண்டு போனவளைப் பலத்த ஜாதியாகவும் வைப்பேன், அவர்கள் பேரில் கர்த்தர் சீயோன் பர்வதத்திலே இது முதல் என்றென்றைக்கும் இராஜாவாயிருப்பார்." (மீகா 4:6,7)

தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்தை ஆபிரகாம் எதிர்பார்த்திருந்தார். (எபிரெயர் 11:10) புதிதாக கட்டப்பட்ட தெய்வீக கட்டுமான நகரத்தையோ அல்லது புதிய எருசலேமையோ அவர் எதிர்ப்பார்க்கவில்லை, ஏனெனில் பழைய எருசலேமும் இன்னும் நிறுவப்படவில்லை. வாக்குத்தத்தம் எப்படி நிறைவேற்றப்படும் என்ற விவரத்தை ஆபிரகாம் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் தேவன் பூமியில் ஒரு இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று விசுவாசித்தார். மேலும் பரலோக சந்ததியையும் ஸ்தாபிப்பார் என்ற ஒரு குறிப்பையும் அவருக்கு வழங்கப்பட்டது. (ஆதியாகமம் 26:4) வாக்குறுதியின் போது இஸ்ரயேல் இன்னும் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்படாத நிலையில், அத்தகைய வாக்குறுதியின் பாவநிவாரண தாக்கங்களை ஆபிரகாம் உணர்ந்ததாக இயேசு சுட்டிக்காட்டினார் :-"உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான், கண்டு களிகூர்ந்தார் என்றார்." (யோவான் 8:56)உலக மனுக்குலத்திற்கு காணக்கூடிய சாட்சியாக, நம்முடைய நாளில் இஸ்ரயேலின் மறுசீரமைப்பு, தெய்வீக ஆபிரகாமின் வாக்குறுதியின் நம்பகத்தன்மைக்கு உறுதியான சாட்சிகளில் ஒன்றாகும். கிபி 70 மற்றும் கிபி 135இல் நடந்த போர்கள் இஸ்ரயேல் தேசத்தை அழித்து யூத ஜனங்களை சிதறடித்தது. எருசலேமில் உள்ள ஆலயம் அழிக்கப்பட்டது. நகரத்தின் பெயர் மாற்றப்பட்டது. நாடுகடத்தப்பட்ட யூதர்கள் துக்க நாளான ஏவ் 9ம் தேதியைத் தவிர அதற்குள் நுழைய தடை விதிக்கப்பட்டது. ஏறக்குறைய 2,000 ஆண்டுகளாக யூதர்களின் துன்புறுத்தல் தொடர்ந்தது. ஆனால் குறித்த காலத்தில் தேவன் அவர்களை நினைவுகூருவார். தெய்வீக வாக்குத்தத்தம் அதை உறுதிப்படுத்தியது.

"இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார் ? இப்படிப்பட்டவைகளைக் கண்டது யார் ? ஒரு தேசத்துக்கு ஒரேநாளில் பிள்ளைப்பேறு வருமோ ? ஒரு ஜாதி ஒருமிக்கப் பிறக்குமோ ? சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்படும் தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது. எருசலேமை நேசிக்கிற நீங்களெல்லாரும் அவளோடேகூடச் சந்தோஷப்பட்டு, அவளைக்குறித்துக் களிகூருங்கள். அவள் நிமித்தம் துக்கித்திருந்த நீங்களெல்லாரும் அவளோடே கூட மிகவும் மகிழுங்கள்" என்று ஏசாயா எழுதினார். (ஏசாயா66:8,10)


1878 இல், பாலஸ்தீனாவில் ஒரு காலனி நிறுவப்பட்டபோது, ஏசாயாவின் வார்த்தைகள் நிறைவேற்றத்தின் முதல் ஒளியுடன் ஒலித்தது. ஆனால் போராட்டம் தொடர்ந்தது: -இரண்டாம் உலகப் போரின் போது யூதர்கள் மூன்றில் ஒரு பகுதியினர் அழிக்கப்பட்டனர். யூதர்களுக்கு இது ஒரு தாழ்வான நிலையாக இருந்தது. துன்புறுத்தப்பட்டவர்களின் கைகளில் விடப்பட்டிருந்தால், யூத இனம் முற்றிலுமாக அழிக்கப்பட்டிருக்கும். தேவனுடைய கரம் குறுக்கிட்டது. இந்த தாழ்வான இடத்திலிருந்து யெகோவா தேவன் யூதர்களை எழுப்பி, நவீன கால இஸ்ரயேல் தேசத்தின் மறு ஸ்தாபனத்தை முறியடித்தார். 1948, மே 14ம் தேதி இஸ்ரயேல் தேசம் மீட்டெடுக்கப்பட்டது. இந்த அதிசயத்திற்கு எதிரான பெரும் முரண்பாடுகளை மதச்சார்பற்ற பார்வையாளர்கள் மறுக்க முடியவில்லை. அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தேவனுடைய கரத்தைக் கண்டார்கள். நம்மைப் பொறுத்தவரை, தேவனுடைய வழிகாட்டுதலின் கீழுள்ள இஸ்ரயேல் தேசம், தேசங்களின் மத்தியில் உயர்ந்து வருவதால், புதிரின் இறுதித் துண்டுகளில் ஒன்று பொருத்தப்பட வேண்டியதை நாம் தெளிவாகக் காண்கிறோம். (ஓசியா2:14, எசேக்கியேல்37)

## ஆமோஸ் - இஸ்ரயேல் மீட்டகப்பட்டது

"என் ஜனமாகிய இஸ்ரயேலின் சிறையிருப்பைத் திருப்புவேன், அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன், நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆமோஸ் 9:14-15)

ஒரு தேசமாக, இஸ்ரயேல் கிபி 70 இல் மரித்தது. சிறிது காலத்திற்குப் பிறகு அப்போஸ்தலர்கள் மரித்தபோது, கிறிஸ்தவ சபையின் மீது சாத்தானின் செல்வாக்கு வலுவடைந்தது. (மத்தேயு13:25) உதாரணமாக, "வேதாகமம் எங்களுடையது, உங்களுடையது அல்ல"என்று ஜஸ்டின் தியாகி (160) யூதர்களுக்கு அறிவித்தார். "யூதர்கள் தேவனுடைய கிருபையிலிருந்து விலகினவர்கள்" என்று லியோனின் பிஷப் இரேனியஸ் (177) எழுதினார். தேவன் கிறிஸ்தவர்களுக்கு ஆதரவாக யூதர்களை நிராகரித்தார் என்று டெர்டுல்லியன் (160-230) கூறினார். எபிரெய வேதங்களில் உள்ள அனைத்து வாக்குறுதிகளும் கிறிஸ்தவர்களுக்கு மாற்றப்பட்டது என்றும் இந்த மாற்றம் இறையியலில் தொடர்கிறது என்றும் யூசிபியஸ், வெர்செல்லியின் பிஷப் (170) கூறினார். 387ம் ஆண்டில், அந்தியோக்கியாவின் பிஷப் (பவுலின் இல்லத் திருச்சபை) ஜான் கிறிசோஸ்டம், “deicide” "இறைக்கொலை" (தேவனை கொல்லுபவர்) என்ற அர்த்தம் கொண்டு லத்தீன் வார்த்தையை அறிமுகப்படுத்தினார். "யூதர்கள் தேவனால் கைவிடப்பட்டவர்கள். தேவனை கொலை செய்த குற்றத்திற்கு இனி எந்தவிதமான பரிகாரமும் சாத்தியமில்லை" என்றார்.

யூதர்களின் துன்புறுத்தல் இடைக்காலம் முழுவதும் தொடர்ந்தது. ஜெர்மனியிலுள்ள மைன்ஸ் நகரில் உள்ள யூதர்கள், ஆளும் அரண்மனையில் துன்புறுத்தலில் இருந்து தஞ்சம் அடைய அழைக்கப்பட்டவர்கள் உள்ளே நுழைந்தவுடன்




படுகொலை செய்யப்பட்டனர். ஸ்பானிய விசாரணையின் போது சுமார் 350,000 யூதர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். சபைக்கு அனுப்பிய ஏழு தூதர்களில் ஒருவராக நம்பப்படும் மார்ட்டின் லூதர் கூட கிபி 1540 ல் வெளியிடப்பட்டதில், யூதர்களையும் அவர்களின் பொய்களையும் நிராகரித்தார். பின்னர், "இறுதி தீர்வு" என்று அழைக்கப்பட்ட இந்த ஆவணத்தைப் பயன்படுத்தி அடால்ஃப் ஹிட்லர் ஆறு மில்லியன் யூதர்களை அழித்ததை நியாயப்படுத்தினான்.

பல கிறிஸ்தவர்கள் இஸ்ரயேலின் மீள் எழுச்சியை ஒரு நவீன அதிசயமாக பார்க்கிறார்கள். ஆனால் அதன் பின்னர் இருக்கும் நோக்கத்தை புரிந்துகொள்வதில்லை. ஆபிரகாமிய வாக்குறுதியின் மகத்தான நிறைவேற்றமான ஆயிரமாண்டு யுகத்தின் வேலையின் மையமாக, எருசலேமைக் கொண்டு, பூமியில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பதை சிலர் காண்கிறார்கள். ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் விசுவாசம் சோதிக்கப்பட்டு நிரூபணமானவர்கள், அந்த வேலையில் தனிப்பட்ட முறையில் தேவனுடைய கொள்கைகளை நிர்வகிக்கும் ஒரு குழுவாக இருப்பார்கள் என்பதை சிலர் பார்க்கிறார்கள். (எபிரெயர் 11:39, 40) புதிய உடன்படிக்கை இஸ்ரயேல் மூலம் அனைத்து மனுக்குலத்துடன் நிறுவப்படும் என்று சிலர் காண்கிறார்கள். "மேலும் சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன். அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரயேலரிலொரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப் பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை

யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும், நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. "(ரோமர்11:25- 27, ஏசாயா 59:20,21) "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்." (உபாகமம் 7:6)

## யோயேல் - மறுசீரமைப்பு

"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்." (யோயேல் 2:28)

பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் கூடியிருந்த சுமார் 3000 பக்தியுள்ள யூதர்களுக்கு இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை பேதுரு நினைவு கூர்ந்தார். அப்போஸ்தலர்கள் பேசுவதைக் கூட்டத்தினர் கேட்டவுடன் அதன் நிறைவேற்றத்திற்கான ஆயத்தம் தொடங்கியது. ஆனால் வரவிருக்கும் காரியங்களுக்கு ஒரு நிழலாக இது ஒரு ஆரம்பமாகவே இருந்தது. முழு மனுக்குலத்தையும் தேவனே மீட்டெடுப்பார் என்பதற்கான உத்தரவாதமாக இது இருந்தது. பேதுரு அதை "திரும்ப கொடுத்தலின் காலம்" என்று அழைத்தார். மேலே உள்ள உரையை மேற்கோள் காட்டும்போது, பரிசுத்த ஆவி ஊற்றப்படும் நேரத்தை பேதுரு குறிப்பிட்டார். யோயேலில் "அந்நாட்களிலே" அல்லது "பின்னர்" என்று அவர் குறிப்பிட்டார். இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் முத்திரிக்கப்பட்ட ஆபிரகாமின் வாக்குறுதியின் மூலம் பரிசுத்த ஆவியாகிய தேவனுடைய வல்லமை இந்த முழு உலகத்தையும் ஒப்புரவாக்கும். இயேசு மத்தியஸ்தராகப் பொறுப்பேற்கும்போது, இந்த வாய்ப்பை பயன்படுத்தி மீட்கப்பட்ட ஒவ்வொருவரையும் அவர் ஒரே ஐக்கியத்தில் கொண்டுவருவார். இதற்கு பாவத்தில் இருந்து விலகுவதும், இயேசுவை தங்கள் மீட்பராக ஏற்றுக்கொள்வதும், நீதியின் தெய்வீக தரத்திற்கு அர்ப்பணிப்பதும் மிக அவசியம். (ஏசாயா28:16-17) இப்படியாக பதிலளிப்பவர்கள் அனைவரும் மனம் மற்றும் உடல் இரண்டிலும் ஒரு மாற்றத்தை அனுபவிப்பார்கள். (செப்பனியா3:9)

இந்த மறுசீரமைப்பின் செயல் முறை சுவிசேஷ யுகத்தில் உள்ள சுத்திகரிப்பின் செயல் முறைக்கு ஓரளவு ஒத்ததாக இருக்கும், அங்கு இயேசுவைப் பின்பற்றுபவர்கள் தங்கள் புதிய மனதை பழைய உடலில் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் இராஜ்யத்தின் போது மனித இனத்திற்கு, நிலைமைகள் மிகவும் சாதகமாக இருக்கும். உயிர்த்தெழுப்பப்படும் மனுக்குலம் ஒரு புதிய உடலைப் பெறுவார்கள். மேலும் பெரிய சோதனைக்காரனான சாத்தான் மனுக்குலத்தை பாதிக்கப்படாதபடிக்கு கட்டப்பட்டிருப்பான். (1கொரிந்தியர் 15:38, ஏசாயா33:24, 2கொரிந்தியர் 4:4, வெளிப்படுத்தல் 20:2) உயிர்த்தெழுப்பப்பட்டவர்கள் மீது பரிசுத்த ஆவி "ஊற்றப்படும் போது" அவர்கள் தங்கள் முழு விருப்பத்தின்படி புதிய ஒழுங்கு முறையுடன் இணக்கமாக அவர்கள் வழிநடத்தப்படுவதால், மறுசீரமைப்பின் ஆசீர்வாதங்கள் முதலில் மனுக்குலத்திற்கு வரும். (ஏசாயா35:8-10) இது அவர்களின் கல்லான இருதயத்தில் மாற்றத்தை விளைவிக்கும், இறுதியில் அவர்கள் முழு விருப்பத்தோடு கீழ்ப்படிவார்கள். வெளிப்படுத்தல் 20:8-10 லின் கொஞ்ச காலத்தில் மனமுவந்து கீழ்ப்படியும், விசுவாசமுள்ள பூமியின் பிரஜைகள் இறுதிப் பரிட்சையில் வெற்றிப் பெற்றால் மட்டுமே, உண்மையில், ஆதாமில் இழந்த அனைத்தையும் திரும்பப் பெற்று, தங்கள் தந்தை ஆதாமைப் போலவே தேவனுக்கு முன்பாக அதே நிலைப்பாட்டிற்கு திரும்புவார்கள்.

## ஒரு நீண்ட செயல்முறை

ஆபிரகாமும் அவருடைய சந்ததிகளும் , இஸ்ரயேல் தேசத்தை என்றென்றும் சொந்தமாக்குவார்கள் என்று இறுதியாக உறுதியளிக்கப்பட்டது. (ஆதியாகமம் 17:8) நம்முடைய நாட்களில், ஆபிரகாமின் சந்ததியினருக்கு, இஸ்ரயேல் தேசம் திரும்பக் கொடுக்கப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். (ஆமோஸ் 9:14,15) இஸ்ரயேலுக்கு குடிப்பெயர்ந்த பலர்

முதன்முறையாக யெகோவா தேவனுக்கும், பரிசுத்த வசனங்களுக்கும் பரிட்சையமானார்கள். தந்தை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டதும், இப்போது மறுசீமைக்கப்பட்ட தேசத்தின் மத்தியில் யூதர்களின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறை பிறந்து வளர்ந்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில், அவர்கள் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில், முழு உலகமும் கூட உள்ளடக்கப் பட்டிருப்பதை(உலகம்) அங்கீகரிக்கும்!.

நீண்ட காலத்திற்கு முன்பு, பரிசுத்த தீர்க்கதரிசிகளான ஏசாயா, மீகா, யோயேல் மற்றும் ஆமோஸ் ஆகியோரின் விசுவாசமுள்ள வார்த்தைகள், வாழ்க்கை மற்றும் வேலை ஆகியவை, தேவனுடைய பெரிய பாவநிவாரணத் திட்டத்தைப் பற்றிய விவரத்தையும் அதில் இஸ்ரயேலின் மறுசீரமைப்பை ஒரு முக்கிய பங்காகவும் வழங்கியது. (ஏசாயா11:12) ஆனால் எசேக்கியேல் தீர்க்கதரிசி குறிப்பிட்டது போல் இது ஒரு நீண்ட செயல்முறையாக இருக்கும்.

"இவ்விதமாய் என் மகிமையை நான் புறஜாதிகளுக்குள்ளே விளங்கப்பண்ணுவேன், நான் செய்த என் நியாயத்தையும் அவர்கமேல் நான் வைத்த என் கையையும் எல்லா ஜாதிகளும் காண்பார்கள்.அன்று முதல் என்றும் நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று இஸ்ரயேல் வம்சத்தார் அறிந்துகொள்வார்கள். இஸ்ரயேல் வம்சத்தார் தங்கள் அக்கிரமத்தினிமித்தமே சிறைப்பட்டுப்போனார்கள் என்று அப்பொழுது புறஜாதிகள் அறிந்துகொள்வார்கள்அவர்கள் எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினபடியால், என் முகத்தை நான் அவர்களுக்கு மறைத்து, அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக் கொடுத்தேன், அவர்கள் அனைவரும் பட்டயத்தால் விழுந்தார்கள். அவர்களுடைய அசுத்தத்துக்குத் தக்கதாகவும், அவர்களுடைய மீறுதல்களுக்குத் தக்கதாகவும், நான் அவர்களுக்குச் செய்து என் முகத்தை அவர்களுக்கு மறைத்தேன். ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர்சொல்லுகிறது என்னவென்றால்- அவர்கள் தங்கள் அவமானத்தையும், பயப்படுத்துவார் இல்லாமல், தாங்கள் சுகமாய்த் தங்கள் தேசத்தில் குடியிருக்கும்போது எனக்கு விரோதமாய்த் தாங்கள் செய்த எல்லாத் துரோகத்தையும் சுமந்து தீர்த்த பின்பு, நான் யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பி, இஸ்ரயேல் வம்சமனைத்துக்கும் இரங்கி, என் பரிசுத்த நாமத்துக்காக வைராக்கியமாயிருப்பேன். நான் அவர்களை ஜனசதளங்களிலிருந்து திரும்பிவரப் பண்ணி, அவர்களுடைய பகைஞரின் தேசங்களிலிருந்து அவர்களைக் கூட்டிக்கொண்டுவந்து, திரளான ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக அவர்களுக்குள் நான் பரிசுத்தர் என்று விளங்கும் போது, தங்களைப் புறஜாதிகளிடத்தில் சிறைப்பட்டுப்போகப்பண்ணின நான் தங்களில் ஒருவரையும் அங்கே அப்புறம் வைக்காமல், தங்களைத் தங்கள் சுயதேசத்திலே திரும்பக்கூட்டிக் கொண்டுவந்தேன் என்பதினால், நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறிந்துக்கொள்வார்கள். நான் இஸ்ரயேல் வம்சத்தார்மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என்றார்."(எசேக்கியேல் 39:21-29)

நாம் இப்போது தேவனுடைய வல்லமையான இராஜ்யத்தின் வாசலில் நிற்கிறோம். நம்முடைய கண்கள் காண்கிறதினால் அவைகள் பாக்கியமுள்ளது. நம்முடைய காதுகள் கேட்பதினால் அவைகள் பாக்கியமுள்ளது! நம்முடைய வாழ்க்கை மற்றும் நம்முடைய வேலை ஆகியவையும் கூட நம்முடைய பரலோகத் தகப்பனுக்கு உண்மையுள்ள காணிக்கையாக செலுத்துவோம். மேலும் அவர் அதை அனைவருக்கும் ஆசீர்வாதமாகப் பயன்படுத்துவார்.



### சிறைபிடிக்கப்பட்ட ஒரு இஸ்ரயேலன்

# தானியேல், நம்பிக்கையின் தீர்க்கதரிசி

Tom Ruggirello

"...தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார், தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்." (தானியேல் *1:17*)

ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில், தானியேல் புத்தகத்தை ஆராய்வது ஒரு உணர்ச்சி ஊட்டுகிற படிப்பாகும். இஸ்ரயேலின் வரலாற்றில் அவரது வாழ்க்கை ஒரு அசாதாரணமான காலகட்டமாக இருந்தது.

பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டபோது, தானியேல் ஒரு புறஜாதி உலகில் தனது யூத விசுவாசத்தோடு வாழ்வதைக் கண்டார். இந்த சிறையிருப்பு தானியேலுக்கும் அவரது மூன்று தோழர்களான அனனியா, மிஷாயேல் மற்றும் அசரியாவுக்கு பல சவால்களை உருவாக்கியது.

தானியேலின் புத்தகத்தில், ஆபிரகாமின் வாக்குத்தத்தம் முதல் முதலில் நேபுகாத்நேச்சாரின் கனவில் காணப்படுகிறது. இஸ்ரயேலின் எதிர்காலத்தில் தேவன் புறஜாதியாரை எவ்வாறு அவர்களோடு ஈடுபடுத்துவார் என்பதை விளக்குவதற்காக தேவன் பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு இந்த கனவைக் கொடுத்தார்.




இரண்டாம் அதிகாரத்தில், நேபுகாத்நேச்சார் குழப்பமான ஒரு கனவு கண்டார். அவர் தனது மந்திரவாதிகள், ஜோதிடர்கள் மற்றும் குறிச்சொல்லுகிறவர்கள் அனைவரையும் அழைத்து, கனவின் அர்த்தத்தை மட்டுமல்ல, உண்மையில் அவர் கண்ட கனவையும் சொல்லும்படி கோரினார். சாத்தியமற்றதாகத் தோன்றின இந்த சவாலைத் தவிர்க்க, இராஜா தனது கனவை அவர்களுடன் பகிர்ந்து கொண்டால், அவர்கள் விளக்கத்தை சொல்லுவார்கள் என்று பதிலளித்தனர். ஆனால் கனவுகள் அடிக்கடி மறைந்து போவது போல் இந்த கனவும் அவரது நினைவிலிருந்து மறைக்கப்பட்டிருக்கலாம்.

அவர்கள் தங்களை பாதுகாப்பதற்காக, பூமியில் யார் ஒருவரும் இதுபோன்ற ஒரு விஷயத்தை எதிர்ப்பார்க்க மாட்டார்கள் என்றும் அவருடைய கனவை அறியக்கூடிய மனிதன் ஒருவரும் இல்லை என்றும் கூறினார்கள். இதனால் கோபமடைந்த நேபுகாத்நேச்சார், பேரரசில் உள்ள அனைத்து ஞானிகளும் கொல்லப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்.

ஞானிகளின் கூட்டத்தில், தானியேலும் அவரது மூன்று நண்பர்களும் மரண தண்டனைக்கு உட்பட்டிருந்தார்கள். தானியேலின் முறையீட்டின் பேரில், கனவின் அர்த்தத்தை அறிய தவணைக் கொடுக்கப்பட்டது. எந்த மனிதனும் கனவை அறிய முடியாது என்ற ஞானிகளின் சொற்கள் சரியானதாக இருந்தது. இராஜாவின் கனவைப் பற்றிய விவரங்களை தானியேலின் சொந்த கனவில் தேவனே வெளிப்படுத்தினார். கனவையும் அதன் அர்த்தத்தையும் நேபுகாத்நேச்சாருக்கு வெளிப்படுத்திய தானியேல், கனவையும் அதன் அர்த்தத்தையும் வெளிப்படுத்தியதற்காக தேவனை பணிவுடன் பாராட்டினார்.

"கடைசி நாட்களில் சம்பவிப்பதை" மற்றும் "இனிமேல் சம்பவிக்கப் போகிறதென்ன" (தானியேல் 2:28,29) என்பதை தேவன் இராஜாவுக்கு அறிவித்திருக்கிறார் என்று தானியேல் சாட்சியளித்தார். இந்த சிறிய தடயங்கள் நேபுகாத்நேச்சாரின் கனவின் தீர்க்கதரிசன தன்மையை சுட்டிக்காட்டுகிறது. மேலும் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் இறுதி நிறைவேற்றத்தைப் பற்றிய விவரங்களை

வழங்கும் முக்கியமான நிகழ்வுகளை பரிந்துரைக்கிறது.

## நேபுகாத்நேச்சாரின் தீர்க்கதரிசன கனவு

நேபுகாத்நேச்சார் தனது கனவில் அசாதாரணமான மகிமையான ஒரு பெரிய சிலையைக் கண்டார். அதற்கு பொன்னான தலை, வெள்ளியால் செய்யப்பட்ட மார்பகமும் கைகளும், வயிறும் தொடைகளும் செம்பினாலும் மற்றும் கால்கள் இரும்பினாலும் செய்யப்பட்டிருந்தது. பாதங்கள் களிமண்ணோடு இரும்பும் கலந்திருந்தது. கைகளினால் பெயர்க்கப் படாத ஒரு கல் மலையிலிருந்து வந்து. அந்த சிலையின் கால்களில் மோதியது, சிலை நொறுங்கியது. உடைந்த துண்டுகள், கோடை காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாகி, அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டு போயிற்று. சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று. (தானியேல் 2:31-35)




நேபுகாத்நேச்சாரின் கனவின் அர்த்தத்தை தானியேல் விளக்கிய போது, தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு தொடர்பு இருப்பது தெளிவானது. நேபுகாத்நேச்சாரின் பேரரசு பொன்னான தலையாக இருந்தது. தேவன் அவருக்கு, "இராஜ்யமும், வல்லமையும், பலத்தையும் மகிமையையும்" கொடுத்திருந்தார்.(தானியேல் 2:37) பாபிலோனைத் தொடர்ந்து, மற்றொரு இராஜ்யம் எழும்பும், மேதோ - பெர்சியாவின் இராஜாவான கோரேஸ் பாபிலோனைக் கைப்பற்றினார். அவர் ஒரு பெரிய பேரரசாகவும், அதிக செல்வந்தராகவும் இருந்தார். இருப்பினும், காலப்போக்கில், அதன் தார்மீக தலைமையின் இளவரசர்கள் சிலரின் கீழ், யூதர்கள் சீரழிந்து, மிகவும் கொடூரமாக நடத்தப்பட்டார்கள். இந்த அம்சம் பொன்னான தலையை விட ஒரு தாழ்வான உலோகம், வெள்ளியினால் செய்யப்பட்ட மார்பகம் மற்றும் கைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

செம்பினால் செய்யப்பட்ட வயிறு மற்றும் தொடைகள் அலெக்சாண்டர் தி கிரேட்டின் கீழ் மூன்றாம் உலகப் பேரரசான கிரேக்கத்திற்கு ஒத்திருக்கிறது. இந்த இராஜ்யம் "பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும்" என்ற அறிக்கையில் கிரேக்கம் உலகின் பரந்த தன்மை கணிக்கப்பட்டது. (தானியேல் 2:39)

இரும்பினாலான கால்கள் நான்காவது பேரரசு, மிகவும் வல்லமையுள்ளதாகவும், இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுவதையும் குறிக்கிறது. அது முந்தைய அனைத்து இராஜ்யங்களையும் துண்டு துண்டாக உடைத்து, "எல்லாவற்றையும் அடக்கி வைத்திருக்கும். " இது வலிமைமிக்க ரோம பேரரசு, மிகவும் பரந்த பேரரசை டியோக்லெஷியன் மேற்கு மற்றும் கிழக்கு பேரரசுகளாகப் பிரித்தார்.

ரோம் எவ்வாறு திருச்சபையோடு இணைந்திருந்ததை (அரசியல்+மதம்) களிமண்ணோடு கலந்த இரும்பான பாதங்களும் விரல்களும் எடுத்துக்காட்டியது. இறுதியில் புறஜாதி நாடுகளின் பல பிரிவுகளாகப் பிரிந்தது என்பதை விளக்குகிறது. அந்த கல் சிலையை தாக்கி, அதை நொருக்கும் தருணமாக அது மாறியது. கனவின் முன்னோக்கு நோக்கம் தானியேல் 2:44லில் உள்ளது. "அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார், அந்த இராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை, ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்."

இவ்வாறாக, நேபுகாத்நேச்சாரின் கனவும், தானியேலின் சாட்சியும், பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதாக தேவன் தந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு ஒரு நீண்ட

இடைப்பட்ட காலம் உள்ளதாக தேவனுடைய தீர்க்கதரிசனமானது சாட்சியளித்தது. இந்த தீர்க்கதரிசன கனவின் துல்லியத்தை வரலாற்று நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன. உண்மையில், நான்கு வல்லமையுள்ள பேரரசுகள் மட்டுமே தானியேலின் காலத்திலிருந்து வந்தவை, அவைகள் வாக்களிக்கப்பட்ட தேசமான இஸ்ரயேலை கைப் பற்றி, ஆதிக்கம் செலுத்தியது.

விசுவாசத்தைப் பலப்படுத்தும் இந்த தீர்க்கதரிசனம், புறஜாதிகளின் வல்லமை தேவனால் தெர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்களுக்கு மிகுந்த உபத்திரவத்தை கொண்டுவரும் என்பதை வெளிப்படுத்தியது. ஆனால் மனித வரலாற்றில் இந்த கடினமான காலத்தின் நினைவகம், தேவனுடைய திட்டத்தின் சிறந்த நன்மைகளில் ஒன்றை வழங்கும். எந்த மனித அரசாங்கமும், தேவனிடமிருந்து மட்டுமே வரக்கூடிய ஆசீர்வாதங்களை வழங்க முடியாது என்பதை மனுக்குலம் புரிந்து கொள்ளும். கொடூரமான மற்றும் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளின் கீழ் வாழும் அனுபவம், மனுக்குலத்திற்கு சிறந்த ஒன்றின் அவசியத்தை கற்பிக்கும். தேவனுடைய இராஜ்யம் வெளிப்படும் போது, உலகம் மகிழ்ச்சியடையும். மனிதனின் மனிதாபிமானமற்ற தன்மையின் நினைவு, மனிதனின் இருதயத்தில் மட்டுமே ஆழமாக இருக்கும் என்பது மகிழ்ச்சியாக இருக்கும்.

## நேபுகாத்நேச்சாரின் அவமானம் மற்றும் மறுசீரமைப்பு

தானியேல் 4ம் அதிகாரத்தில், நேபுகாத்நேச்சார் தனது அரண்மனையில் நடந்துக்கொண்டிருக்கையில் அவருடைய இராஜ்யத்தின் வல்லமையையும் மகத்துவத்தைக் கண்டு வியத்து கொண்டிருந்தார். "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று இராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று...."(தானியேல் 4:30) தன் பெருமிதத்தில் கூறினார்.

இந்த வார்த்தைகள் இராஜாவின் வாயில் இருந்து உதிரும்போதே, "வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, இராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று, மனுஷரினின்று தள்ளப்படுவாய், வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய், மாடுகளைப்போல் புல்லை மேய்வாய், இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய இராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்துகொள்ளு மட்டும் ஏழு காலங்கள் உன்மேல் கடந்துபோகும் என்று உனக்குச் சொல்லப்படுகிறது என்று விளம்பினது." (தானியேல் 4:31, 32)


நேபுகாத்நேச்சாரின் பொன்னான புகழ்பெற்ற தலை காணப்பட்டாலும், அவரது இருதயத்தில் உள்ள பெருமையை இந்த தெய்வீக அறிவிப்பு வெளிப்படுத்தியது. நாகரீகமற்ற காட்டு மிருகங்களின் வாழ்க்கையை அவர் ஏழு "காலங்கள்" அனுபவித்தார். தனிப்பட்ட முறையில் தாழ்மைப்படுவதோடு, இது ஒரு காலத்தை தீர்க்கதரிசனமாக குறிப்பிடக்கூடியதாகவும் இருந்தது. அதாவது இஸ்ரயேலின் மீது புறஜாதிகளின் ஆதிக்கத்தின் கால அளவை இது குறிப்பிட்டது. வேதாகமத்தின் படி "காலம்" என்பது 360 நாட்களைக் கொண்ட ஒரு வருடமாகும். ஏழு காலங்கள் என்பது 2,520 வருடங்கள் (7 x 360 = 2,520) கொண்ட காலத்தை விவரிக்கிறது. கிமு 607 லில், நேபுகாத்நேச்சார் வாக்களிக்கப்பட்ட தேசத்தின் மீது படையெடுத்தார். அப்போது இந்த ஏழு தீர்க்கதரிசன காலங்கள் தொடங்கியது. புறஜாதியின் வல்லமை 1914 வரை 2,520 ஆண்டுகளுக்கு இஸ்ரயேலின் மேல் ஆதிக்கம் செலுத்தியது. முதலாம் உலக போருடன், இஸ்ரயேல் மீதான புறஜாதிகளின் ஆட்சி அகற்றப்பட தொடங்கியது. 1917ம் ஆண்டு, முதாலாம் உலக போரின் போது, பிரிட்டிஷ் அரசாங்கம் பால்ஃபோர் பிரகடனத்தை பொதுவான அறிக்கையாக அறிவித்தது. இது பாலஸ்தீனத்தில் "யூதர்களுக்கான தேசிய இல்லம்" அமைப்பதற்கான ஆதரவு அறிவிப்பாகும். இந்த சிறிய ஆரம்பம் இறுதியில் 1948 இல் இஸ்ரயேல் தேசத்தை ஸ்தாபிக்க

வழிவகுத்தது. 2,520 வருடங்களில் முதன் முறையாக இஸ்ரயேல் தனது சொந்த இறையாண்மை அரசாங்கத்தை அமைத்ததால் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தின் புறஜாதிகளின் கட்டுப்பாடு முடிவுக்கு வந்தது.

தேவன் இஸ்ரயேலின் மீது அடக்கு முறையான புறஜாதிகளின் ஆட்சியை அனுமதிப்பதன் மூலம், மீண்டும் இஸ்ரயேலையும் அதன் மேல் ஆதிக்கம் செலுத்தின தேசங்களையும் தாழ்மைப்படுத்த அவர் கிரியை செய்தார். நேபுகாத்நேச்சார் முந்தைய நிலைக்கு மீட்டெடுக்கப்பட்டார். மேலும் அவரது தனிப்பட்ட அனுபவத்தின் மூலம் அவர் உன்னதமான தேவனிடம் வந்தார். இது போன்ற அடக்குமுறை நிலைமைகளை அனுபவித்த பிறகு இந்த உலகமும் மறுசீரமைக்கப்படும் என்பதற்காக ஒரு சிறிய முன்காட்சியாக இது உள்ளது. பின்னர், தேவனுடைய இராஜ்யத்தின் வேலையின் மூலம், மனுக்குலம் இறுதியில் பூமியின் மேல் ஆதிக்கம் செலுத்தும். புறஜாதியார் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஆட்சி செய்ய அனுமதித்ததன் மூலம், கடினமான அனுபவங்கள், இறுதியில் நன்மையான பலனை தரும் என்று தேவனுடைய ஞானம் கண்டது.

## தானியேல் கண்ட நான்கு மிருகங்கள்

7ம் அதிகாரத்தில். தானியேல் நான்கு அசாதாரண மிருகங்களின் தரிசனத்தை கனவு கண்டார். முதலாலும் மிருகம் கழுகின் செட்டைகள் கொண்ட சிங்கம். (வசனம் 4). இரண்டாவது மூன்று விலா எலும்புகளுடன் ஒரு கரடி (வசனம் 5). மூன்றாவது நான்கு தலைகள் மற்றும் நான்கு செட்டைகள் கொண்ட சிறுத்தை (வசனம் 6) நான்காவது "பயங்கரமும் கெடியுமான" வலிமைமிக்கதாக இருந்தது.(வசனம் 7) இந்த மிருகங்கள் நேபுகாத்நேச்சார் கண்ட சிலையைப் போலவே, உலகின் அதே உலகளாவிய பேரரசுகளை அடையாளப்படுத்துகிறது. ஆனால் இது மனித பார்வையில் இல்லை, தேவனுடைய பார்வையில் காட்டப்பட்டது. தெய்வீக நிலைப்பாட்டில் அவை புகழ்பெற்ற பேரரசுகளாக இல்லை. அவை அழியக்கூடிய




தீமையான இராஜ்யங்கள். அவைகள் மனுஷரால் மதிக்கப்படும் அற்புதமான உருவங்களாகவும் அல்ல.

இந்த தரிசனத்தோடு ஆபிரகாமின் வாக்குத்தத்திற்கு தொடர்பை தானியேல் 7:13-14 இல் காணலாம். "இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார், அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் இராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய இராஜ்யம் அழியாததுமாயிருக்கும்." மனுஷரின் பொல்லாத ஆட்சி முடிவுக்கு வரும் என்றும், சிறிது காலம் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது என்றும் இந்த ஆறுதல் தரும் காட்சி, தேவனுடைய வாக்குறுதியாக உள்ளது. இருப்பினும், நம்முடைய ஆண்டவர் இந்த அதிகாரத்தை அபகரிக்கவில்லை. தந்தை ஆதாமுக்காக தன் உயிரை பலி செலுத்தியதால் அவருக்கு இந்த ஆதிக்கம் "கொடுக்கப்பட்டது". அவருடைய இராஜ்யத்தின் ஆட்சி, "மகிமையானது" என்றும் "நித்தியமானது" என்றும் தெய்வீக கண்ணோட்டத்தில் விவரிக்கப்படுகிறது. நம்முடைய கர்த்தருடைய இராஜ்யத்தின் நன்மைகளுக்கு எல்லையே இருக்காது.

"பர்வதங்கள் தோன்றுமுன்னும், .. உலகத்தையும் உருவாக்கும் முன்னும்" என்பது "நித்தியத்திற்கும் " உள்ள யெகோவா தேவனைக் குறிக்கிறது. (சங்கீதம்

90:2) அவர் எரிகிற நெருப்புமாயிருக்கிற சக்கரங்களைக் கொண்டஅக்கினி ஜுவாலையுமான சிங்காசனத்திலும் அமர்ந்திருப்பவராக விவரிக்கப்படுகிறார். இந்த பிரபஞ்சத்தின் மேலுள்ள தேவனுடைய அதிகாரத்தை சிங்காசனம் குறிப்பிடுகிறது. பூமியின் விவகாரங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் நியாயமான மற்றும் தார்மீகமான எல்லா உரிமைகள் அவருக்கு மட்டுமே உள்ளது. எரியும் சிங்காசனமும் அக்கினியின் சக்கரங்களும் பூமியை காயப்படுத்திய பெரிய மிருகங்களுக்கு தேவனுடைய அழிவுகரமான தீர்ப்புகளை விவரிக்கின்றன. அவருடைய அதிகாரத்தால், அவர்களின் ஆதிக்கம் பறிக்கப்பட்டு, அத்தகைய உயர்ந்த அதிகாரத்திற்கு தகுதியான ஒருவருக்கு வழங்கப்படுகிறது. தேவனுடைய அதிகாரத்தின் மூலம் இந்த ஆசீர்வாதத்தின் வாக்குறுதிக்கு உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. மனுஷனுடைய அபூரணம் மற்றும் பொதுவாக தீய ஆட்சி முடிவுக்கு வரும், கிறிஸ்துவின் ஆட்சி சமத்துவத்துடனும், அன்புடனும் ஆட்சி செய்யும் என்பதை அறிவதற்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். தந்தையாகிய ஆபிரகாமுக்கு தேவன் தந்த வாக்குத்தத்தம் எவ்வாறு நிறைவேற்றப்படும் என்ற மற்றொரு விவரம் இந்த பத்தி வழங்குகிறது.

மனித குடும்பத்தை ஆசீர்வதிக்கும் பணியில் பங்கு கொள்ளும் பாக்கியமே சபைக்கு கிடைத்துள்ள கூடுதலான ஆசீர்வாதமாகும். "வானத்தின் கீழெங்குமுள்ள இராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும், அவருடைய இராஜ்யம் நித்திய இராஜ்யம், சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றார்" (தானியேல் 7:27)

### மேசியாவிற்கு 70 வாரங்கள்

பாவத்திற்கான பரிகாரம் இல்லாமல் ஆபிரகாமின் வாக்குத்தத்தம் தேவனுடைய ஆசீர்வாதங்களை ஒருபோதும் கொண்டுவர முடியாது. ஆபிரகாமின் வாக்குறுதியின் மற்றொரு விவரத்தை,மேசியாவிடம் வழிநடத்தும் 70 வாரங்கள் என்ற தீர்க்கதரிசனத்தை பகிர்ந்து கொள்ளும் பாக்கியத்தை தானியேல் பெற்றார். "அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார், அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும் என்றான்."(தானியேல் 9:24)

தடை செய்யப்பட்ட பழத்தை ஆதாம் புசித்து, கீழ்ப்படியாமல் போனபோது, அவர் அடிப்படையில் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தார். இந்த புரட்சியே இந்த தீர்க்கதரிசனத்தை மேசியாவுடன் இணைக்கிறது. இதுவே முதல் விஷயம். 70 வாரங்கள் "அத்துமீறல்" (ஸ்டராங்கின் 6588, கிளர்ச்சி) முடிக்க தீர்மானிக்கப்படுகிறது. கீழ்ப்படியாமை மனிதனின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தாலும், பாவநிவாரணம் பாவத்தை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் அந்தக் கலகத்தை முடித்துவிடும். (எபிரெயர் 9:26) மேசியா அக்கிரமத்திற்காக நல்லிணக்கம் செய்வார் என்று தீர்க்கதரிசனம் தொடர்கிறது. அக்கிரமம் (ஸ்ட்ராங்கின் 5771, வக்கிரம் சீரழிவு) என்பது பாவத்தின் இழிவான வடிவம். பல சந்தர்ப்பங்களில், மனுக்குலம் சீரழிந்தாலும் அவர்கள் அதில் இருந்து மீளமுடியாது. ஒப்புரவாக்குதலின் புண்ணியம் ஒவ்வொரு வகையான பாவத்தில் இருந்தும் மீட்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது. தீர்க்கதரிசனம் கூறுகிறபடி, ஒப்புரவாக்குதலின் மாபெரும் வேலை, "நித்திய நீதியைக் கொண்டுவரும்" என்று கூறுகிறது.

நம்முடைய ஆண்டவரின் மனித பலி மிகவும் தனிப்பட்ட அனுபவமாக இருந்தது. "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார், நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். " என்று ஏசாயா 53:4,5 கூறுகிறார். ஒப்புரவாகுதலின்

மத்தியஸ்தராக இயேசுவை ஆயத்தம் செய்வதற்கு, அவருடைய அனுபவத்தில் அவர் அடைந்த மனித துக்கங்களும் வேதனைகளும் மிக முக்கியமானதாக இருந்தது. அவருடைய புண்ணியம் மற்றும் மனிதனின் அக்கிரமத்துடனான அனுபவத்தினாலும் பாவம் நீக்கப்பட்டு, அமைதி பெருகும். விசுவாசமுள்ள தீர்க்கதரிசியான தானியேல் மூலம் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் காலம் மற்றும் வெளிப்பாடுகளைப் பற்றிய விவரங்கள் எவ்வளவு அழகாக உள்ளது.

**முடிவு காலம்**

தானியேலுக்குக் கொடுக்கப்பட்ட கடைசி தீர்க்கதரிசனம், தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதைக் குறிக்கும் அடையாளங்களுடன் முடிவடைகிறது. கடைசி காலத்தில், "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாயேல் எழும்புவான்" என்று விவரிக்கப்படுகிறது. (தானியேல் 12:1) சிறு தேசமான இஸ்ரயேல், தானியேலின் ஜனத்தின் புத்திரர்கள், தேவனுடைய இராஜ்யத்தின் அருகாமையைக் குறிக்கும் வேலையின் குறிகாட்டியாக உள்ளனர். உபத்திரவ காலம் மற்றொரு அறிகுறியாகும். மேலும் இரண்டு காரியங்கள் சேர்க்கப்பட்டுள்ளது - "அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான். "(வசனம்4)

ஆபிரகாமின் வாக்குறுதியின் நிறைவேற்றம் நெருங்கிவிட்டதற்கான இந்த அறிகுறிகள் 100 ஆண்டுகளுக்கும் மேலாக தெளிவாக உள்ளது! தேவனுடைய திட்டம் ஒவ்வொரு வடிவமைப்பாக நிறைவேறும் என்பதை அறிந்து, "ஞானவான்கள்" என்று விவரிக்கப்படும் ஒரு வகுப்பார் பொறுமையாக காத்திருக்கிறார்கள். தானியேல் தீர்க்கதரிசனம் முழுவதும் நெய்யப்பட்ட பெரிய நம்பிக்கை 2 மற்றும் 3ம் வசனங்களில் சுருக்கப்பட்டுள்ளது. "பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்."

இந்த பத்தியில் இரண்டு வகுப்புகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆகாயத்தில் பிரகாசிக்கும் ஞானிகள் கிறிஸ்துவின் மணவாட்டியாக நித்திய ஜீவனுக்கு எழுப்பப்படுகிறார்கள். மற்றவர்கள் "நித்திய இகழ்ச்சிக்கு" உயிர்ப்பிக்கப்படுவார்கள், குறிப்பாக இவர்கள் இந்த வாழ்க்கையில் பொல்லாதவர்களாக, விழுந்து போன இனத்தைச் சேர்ந்தவர்கள். கடந்தகால வாழ்க்கையில் அவர்கள் செய்த தீமைக்காக அவமதிக்கப்படுவார்கள். இருப்பினும், ஒவ்வொரு தனிநபருக்கும் (ஹிட்லராக இருந்தாலும் சரி நீரோ மன்னனாக இருந்தாலும் சரி) சீர்திருந்தி நல்லொழுக்கத்தை வளர்ப்பதற்கான வாய்ப்பு தேவனுடைய இராஜ்யத்தில் கொடுக்கப்படும். இது ஆபிரகாமுக்கு அவர் அளித்த வாக்குறுதியில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இயேசு கொடுத்த மீட்கும் கிரயத்தால் இது அங்கீகரிக்கப்பட்டது. மிகவும் சீரழிந்த நபர்களும் தேவனுடைய இராஜ்யத்தின் வேலையில் முன்னேறி பயனடைந்தால், அவர்களுக்கு நித்திய ஜீவன் வழங்கப்படும். தேவனுடைய ஒரே மகனின் இரத்தத்தின் மூலம், ஒவ்வொரு தனிமனிதனையும் மீட்டு, அவர்கள் வாழ்க்கையைப் பெறுவதற்கான முழு வாய்ப்பை வழங்கப்பட்ட தேவனின் மகத்தான கிருபையின் அளவுகோலானது, அவர்களின் அற்புதமான மறுசீரமைப்பாகும்! .ஆபிரகாமின் வாக்குறுதியில் உள்ள ஆழமான அழகை படிப்படியாக வெளிப்படுவதைப் பற்றிய நமது புரிதலுக்கு உதவும் பல நுண்ணறிவுகளை வெளிப்படுத்த பெரிய தீர்க்கதரிசி தானியேல் பயன்படுத்தப்பட்டார். இந்த விவரங்களைப் படிப்பதன் மூலம், நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள மகிமையான நம்பிக்கையில் நாம் பலப்படுத்தப்படுகிறோம்.



தானியேல் தீர்க்கதரிசனங்களைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, அவர் அற்புதமான தீர்க்கதரிசனங்களைச் சொல்லப் பயன்படுத்தப்பட்டாலும், அதன் அதிகமாக அர்த்தத்தைப் புரிந்துகொள்ள அவருக்கு அனுமதிக்கப்படவில்லை என்பதை நினைவில் வைக்க வேண்டும். கடைசி காலம் வரை மறைக்கப்பட்ட விவரங்கள், இப்போது நமக்குத் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சாத்தானின் சாம்ராஜ்யம் அழிக்கப்பட்டு கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைக் காணும் போது நம்முடைய விசுவாசம் பலப்படுத்தப்படுகிறது. தேவனுடைய மனம் மற்றும் இருதயத்தைப் பற்றிய ஆழமான நுண்ணறிவுகளைப் பெறும்போது இதைப் புரிந்துகொள்வது நமக்கு முன் இருக்கும் சிலாக்கியமாகும்.

ஓசியா, செப்பனியா, எரேமியா, எசேக்கியேல், சகரியா, மல்கியா

# என் நாமத்துக்குப் பயந்திருப்பவர்

Todd Alexander

"ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும், அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும், நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப் போல வளருவீர்கள்" (மல்கியா*4:2*)

இது போன்ற தேவனிடமிருந்து வரும் வாக்குறுதிகள், நமது அனுமானங்களைச் சேகரிப்பதற்கும், அவருக்கான நமது கடமைகளை ஆதரிப்பதற்கும் நாம் பயன்படுத்தக்கூடிய உண்மை அடிப்படையிலான சான்றுகளாக இருக்கிறது. தேவனுடைய நாமத்தை நாம் மதித்து கனம் பண்ண வேண்டும் என்ற தேவனுடைய விருப்பத்தை மல்கியா வெளிப்படுத்தியிருக்கிறார். ஒரு விஞ்ஞானியாக (பயபக்தியுடன்) பின்னர் ஒரு குழந்தையாகவும் (விளையாட்டாக குதிக்கவும்) ஏற்றுக்கொள்ள தேவன் நம்மை அழைக்கிறார்.

ஓசியா, செப்பனியா, எரேமியா, எசேக்கியேல், சகரியா மற்றும் மல்கியா ஆகிய தேவனுடைய தூதுவர்கள் மூலம் வழங்கப்பட்ட சில வாக்குத்தத்தங்களை நாம் பரிசீலிக்கலாம். இந்த "உத்தமமான இஸ்ரயேலர்கள்" தேவனை பயபக்தியோடு மதித்து, பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வதினால் அவருடைய அழைப்பிற்கு பதிலளித்தார்கள். இவர்களின் வாயினால் அறிவிக்கப்பட்ட தேவனுடைய தீர்க்கதரிசனங்கள் சத்தியத்தின் துணுக்குகளை வழங்கியது. இவைகளை இணைக்கும்போது, தொலைவில் நிறைவேறக்கூடிய தந்தையாகிய ஆபிரகாமுக்கு தேவன் தந்த வாக்குறுதியின் படி இந்த உலகத்தை குணப்படுத்துதல், குணப்படுத்த உதயமாகும் நீதியின் சூரியனைப் பற்றிய அதிகமான விவரங்களை வெளிப்படுத்துகிறது.

## ஓசியா - கி.மு. 767

கோமருடனான தனது திருமணத்தில், ஓசியா ஒரு அனுபவத்தைப் பெற்றார், அது நிச்சயமாக அவரது குணத்தை வளர்த்து, அவரை தேவனிடம் நெருக்கமாக வைத்திருந்தது. ஓசியாவின் கீழ்ப்படிதல் அவருடைய விசுவாசத்தின் உயிருள்ள நிருபமாக இருந்தது. வழிதவறிய இஸ்ரயேல் தேசத்தை தேவன் மணம் முடித்தார் என்பதற்கான ஒரு தனித்துவமான உருவகத்தை ஓசியா நமக்குத் தருகிறார். (ஓசியா1:2-3) இஸ்ரயேலர்கள் ஒரு தேசமாக வழிதவறி போனாலும், அவர்களுக்குள் ஓசியாவைப் போன்ற "உத்தம இஸ்ரயேலர்கள்" இருந்தனர்.

"ஆயினும், இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துக்கொண்டுபோய், அவளோடே பட்சமாய்ப் பேசி, அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத்தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன், அப்பொழுது அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள்." (ஓசியா2:14-15)

மாம்ச இஸ்ரயேலுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதத்தை அவர்கள் பெறுவதற்கு, அவர்களின் கீழ்படிதலே நிபந்தனையாக வைக்கப்பட்டிருந்த போதிலும், தேவனுடைய அனந்த ஞானத்தில், நீண்ட காலத்திற்கு முன், ஆபிரகாமுக்கு அவர் அளித்த நிபந்தனையற்ற வாக்குத்தத்தத்தில், தலைமுறை தலைமுறையாக குடும்பங்கள் ஏங்கின மறுசீரமைப்பின் நம்பிக்கைக்குரிய அங்கீகரிப்பை அவர் வழங்கினார்.



The prophet Hosea lived during the Assyrian period.




ஒரு இஸ்ரயேலன் தங்கள் தேசத்திற்குத் திரும்பி வருவதற்கான இந்த வாக்குத்தத்தத்தின் மீதான விசுவாசம், இஸ்ரயேலின் "கணவனாக" அவர்கள் தேவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையின் விகிதத்தில் இருந்தது. (ஓசியா2:16) 1878ம் ஆண்டில், விசுவாசிகளான இஸ்ரயேலர்கள், இந்த தீர்க்கதரிசனத்தில் நம்பிக்கை கொண்டு, வாக்களிக்கப்பட்ட தேசத்தில் பெட்டா டிக்வா (எபிரெய பாஷையில் "நம்பிக்கையின் வாசல்") என்ற காலனியை நிறுவினர். தேவனுடைய நேரத்தில், ஓசியாவின் "நம்பிக்கையின் வாசல்" என்ற தீர்க்கதரிசனம் கொடுக்கப்பட்ட பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இஸ்ரயேல் தேசத்தின் மறுசீரமைப்பில் நிறைவேறியது.

"அவர்கள் நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன், அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன், மரணமே உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்." (ஓசியா13:14)

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டுகிறார். மேலும் நீண்ட காலத்திற்கு பின் ஆயிரமாண்டு யுகத்தில், ஆதாமின் சந்ததியின் மரணம் ஒழிக்கப்படும் பகுதிகளுக்கு அவர் இதை பொருத்துகிறார். (1கொரிந்தியர் 15:55) ஆனால் இந்த தீர்க்கதரிசனத்தின் நம்பிக்கையில் ஒரு உறுதியான நன்மையும் இருந்தது - இரட்சிப்பின் நம்பிக்கை. இதை கருத்தில் கொள்ளும் ஒவ்வொரு விசுவாசமுள்ள இஸ்ரயேலரின் நம்பிக்கையை உயர்த்தும் ஆற்றல் பெற்றதாக உள்ளது.

ஒருவேளை இந்த உண்மையுள்ள இஸ்ரயேலர்கள் யோபு புத்தகத்தில் உள்ள விசுவாசம் மற்றும் விடாமுயற்சியின் படிப்பினைகளைப் பெற்றிருக்கலாம், இது அவருடைய வாக்குறுதிகளின் பின்னணியில் தங்கள் முந்தைய வாழ்க்கை அனுபவங்களைச் சரிசெய்ய முடியாத தேவனுடைய ஜனங்கள் அனைவரின் நன்மைக்கான உருவகமாகும். (யோபு14:12-17) யோபின் கொந்தளிப்பான வாழ்க்கை அனுபவங்களில், தேவன் அவரை நம்பும்படி கற்பிப்பதன் மூலம் அவருக்கு அமைதியைத் தருகிறார். யோபு அனுபவித்த அநீதி மற்றும் அநியாயங்கள் அவரது புதிய போராட்டத்தில் அவரது ஆவிக்குரிய மனதின் மேல் கவனம் செலுத்தியது - அவர் தேவனுடைய நீதியை உணர்ந்து அதற்கு அடிபணிந்தார். இஸ்ரயேலரிடமும் தேவன் இதே காரியத்தை எதிர்பார்த்தார்.

ஒருவேளை நம்மை தேவனுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதற்காக, நம்மையும் கடினமான அனுபவங்களைச் சகித்துக்கொள்ளும்படி தேவன் நம்மை கேட்கலாம். யோபுவைப் போலவே, நம் அனுபவங்களால் நாம் சரியாகப் பயிற்சி செய்யப்படும்போது, நம்மைக் கவனித்துக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருக்கலாம். போராட்டத்தின் மூலம் நம்முடைய சகிப்புத்தன்மை, "பரிசுத்தவான்களின் பொறுமையாகும்." (வெளிப்படுத்தல் 14:12) தேவனுடைய இளைப்பாறுதலில் நாம் பிரவேசிப்பதற்கு பகுத்தறியும் விசுவாசத்தை வளர்த்துக்கொள்வோம். (எபிரெயர் 4:1-10)

யோபுவின் விஷயத்தைப் போலவே, தேவனுடைய ஆசீர்வாதத்தின் நேரமே அதற்கு உண்மையான "ஆதாரம்" என்பதை ஆபிரகாமின் வாக்குத்தத்தம் நிரூபிக்கிறது. வாக்குறுதியின் பலன்கள் எதிர்காலத்தில் வெகு தொலைவில் இருந்தாலும், யோபுவைப் போலவே ஒவ்வொரு தீர்க்கதரிசியும் தங்களுக்கு முன்பாக தேவனுடைய நீதியின் மீது கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

### செப்பனியா - கி.பி. 640

"சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு, இஸ்ரயேலரே, ஆர்ப்பரியுங்கள், எருசலேம் குமாரத்தியே, நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு. கர்த்தர்

உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார். இஸ்ரயேலின் இராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார். இனித் தீங்கைக் காணாதிருப்பாய். அந்நாளிலே எருசலேமைப் பார்த்து, பயப்படாதே என்றும், சீயோனைப் பார்த்து உன் கைகளைத் தளரவிடாதே என்றும் சொல்லப்படும் என் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். அவர் வல்லமையுள்ளவர். அவர் இரட்சிப்பார், அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார், அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார். உன் சபையின் மனுஷராயிருந்து பண்டிகை ஆசரிப்பில்லாமையால் உண்டான நிந்தையினிமித்தம் சஞ்சலப்பட்டவர்களை நான் ஏகமாய்க் கூட்டிக்கொள்ளு வேன். அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டு வருவேன், அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக் கொள்வேன், உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும் போது, பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். "(செப்பனியா3:14-20)

செப்பனியாவின் தீர்க்கதரிசனம் வெளிச்சத்தின் மற்றொரு புள்ளியாக இருந்தது. இஸ்ரயேலின் ஜெப ஆலயங்களிலும், விசுவாசமுள்ள வீடுகளிலும் எப்போதும் சொல்லப்பட்ட நம்பிக்கையின் பிரார்த்தனையாக இருந்தது. இஸ்ரயேல் தேசத்தின் மறுசீரமைப்பு, பாதுகாப்பு, அன்பு மற்றும் அவர்களின் வல்லமையுள்ள தேவனுடைய மெச்சிக்கொள்ளுதலை இது உறுதியளித்தது. அவர் மீண்டும் கூடிவருவதையும், இறுதியாக பூமியிலுள்ள அனைத்து தேசங்களுக் கிடையில் அவர்கள் உயர்த்தப்படுவதாகவும் உறுதியளித்தது. அவர்களின் துன்பங்கள் தீர்ந்துவிடும் என்ற உறுதிமொழியாகவும் இது இருந்தது. இஸ்ரயேலர்கள் மீண்டும் தேவனிடம் திரும்புவதை உள்ளடக்கிய தீர்க்கதரிசனங்களாக இது காணப்படுகிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்கள் திரும்புவதுடன் அது ஆரம்பிக்கும், இன்று அவைகள் நடப்பதை நாம் காண்கிறோம்.


"ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், என் சினமாகிய உக்கிரகோபத்தை யெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், இராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன், பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." (செப்பனியா3:8-9)

இந்த வல்லமையுள்ள செய்தி, இஸ்ரயேலின் இரட்சிப்பு, பூமியின் அனைத்து குடும்பங்களின் இரட்சிப்புக்கான ஒரு பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என்பதற்கான மற்றொரு குறிப்பாக உள்ளது. "சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பதற்கான" வாய்ப்பை இஸ்ரயேல் ஜனங்கள் பெற்றிருந்தார்கள். (யாத்திராகமம் 19:5) இது தேவன் ஆபிரகாமுக்கு அளித்த நிபந்தனையற்ற வாக்குத்தத்தத்தில் முதன்மையான பகுதியாகும். மேலும் இந்த தீர்க்கதரிசனத்தின் வார்த்தைகள் மூலம் யூத ஜனங்களிடம் தேவன் நேரடியாகப் பேசி அதை உறுதிப்படுத்தினார்.

யூபிலி பிரமாணத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் இந்த பெரிய இரட்சிப்பின் கருத்தை இஸ்ரயேலர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். தேசம் எப்போதும் தேவனுடையது என்பதை இஸ்ரயேலர்கள் யூபிலியின் வழியாக நன்கு அறிந்திருந்தார்கள். (லேவியராகமம் 25:23) தேவன் புறஜாதிகளுக்கு அவர் குத்தகைக்கு கொடுத்தவை அவரிடம் திரும்பும், ஆனால் இஸ்ரயேலின் உயர்வு துவங்கும்போது, அவர்களின் அழிவு வரையில் இது சம்பவிக்காது. அப்போது தேவன் மீண்டும் கண்ணின் மணியைப் போல் கூட்டிசேர்க்கப்பட்ட இஸ்ரயேலுக்கு தேசத்தை திரும்பக்கொடுப்பார். இந்த செயல் முறை 100 ஆண்டுகளுக்கு முன்பு கி.பி 1914இல் தொடங்கியது!

### எரேமியா - கி.பி.625

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உட்ன்படிக்கை பண்ணுவேன்.


Jeremiah (in Israel) and Ezekiel (in Babylon) were contemporary prophets, Jeremiah senior to Ezekiel.

.. நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா31:31-34)

ஒவ்வொரு வருடமும் ஆசரிப்புக் கூடாரத்தில் செய்யப்படும் பாவநிவாரண பலிகள், இஸ்ரயேலர்களுக்கு ஒப்புரவாகுதல் என்பது சடங்காக செய்யப்பட்ட ஒன்று, என்ற கருத்தை கொண்டிருக்கிறார்கள். வேதத்தின் மற்ற எந்த பகுதியையும் விட, இந்த பகுதி, இஸ்ரயேலர்களுக்கு தேவனுடன் சமாதானம் செய்வதை உறுதியளித்தது. மேலும் இஸ்ரயேல் ஜனங்களின் இருதயங்களை மாற்றுவதன் மூலம், அது எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பதை விரிவாகக் கூறுகிறது.

ஒவ்வொரு இஸ்ரயேலரும் இந்த வாக்களிக்கப்பட்ட புதிய உடன்படிக்கையை எதிர்பார்த்து, அனுபவிக்கும் இந்த நெருக்கடியை ஒரு புறஜாதியார் கற்பனை செய்வது கடினம். அவர்கள் உண்மையிலேயே தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்களாக இருந்திருந்தால், அவர் ஏன் தம்முடைய ஜனங்களை வரலாறு முழுவதும் கடுமையாக துன்பப்பட அனுமதித்தார்? அவர்கள் செய்த பாவங்களுக்காக அவர்கள் இன்னும் தண்டிக்கப்படுகிறார்களா? (லேவியராகமம் 26:14-46) தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கும் காணக்கூடிய உண்மைக்கும் இடையே உள்ள இடைவெளியானது, பல இஸ்ரயேலர்களின் விசுவாசம் என்னும் கப்பலை உடைத்திருக்கிறது.

ஆனால் எரேமியா தேவனுடைய மற்ற இரண்டு வாக்குறுதிகளுக்கு தூதுவராக இருந்தார். இந்த தீர்க்கதரிசனமான வாக்குத்தத்தங்கள், அவர் தேர்ந்தெடுத்த இஸ்ரயேலர்கள் மீதான அன்பின் மூலம் உலகின் இரட்சிப்புக்கான தேவனுடைய திட்டத்தில் பொறுமை மற்றும் காலத்தின் முக்கியத்துவத்திற்கு பதிலளிக்கும். "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள், எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார். "(ஏசாயா40:1-2) "அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரயேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும், யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகள் கிடையாதிருக்கும், நான் மீதியாக வைக்கிறவர்களுக்கு மன்னிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா50:20) இஸ்ரயேல் தேசத்தின் பாவங்கள் மன்னிக்கப்படும் ஒரு காலம் வரும் என்றும் தேவனுடைய தயவு அவர்களுக்கு திரும்பும் என்று இந்த இரண்டு தீர்க்கதரிசனங்களும் வெளிப்படுத்துகிறன்றது. ஆனால் சராசரி இஸ்ரயேலர்களுக்கு, தங்களுடைய விசுவாசம் வளர்ச்சி அடைவதற்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்ட இந்த வாக்குறுதிகளின் வரிசை, இணைப்பதற்கு கடினமாக இருந்தது. இந்த விசுவாசம் கடினமான யதார்த்தத்தில் தோன்றும் அநீதிகள் மற்றும் அக்கிரமங்களை ஜெயிக்கக்கூடியது.

தானியேலின் வாழ்க்கை, ஒவ்வொரு விசுவாசமுள்ள இஸ்ரயேலருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் சரியான ஆய்வு ஆகும். சிறுவயதில் பிடிப்பட்டார். சிறைபிடிக்கப்பட்டதில் அவருக்கு ஏற்பட்ட அநீதி, அவரது சொந்த நாட்டில் அவரது சொந்த ஜனங்களிடையே அவர்

வளரவேண்டிய வருடங்களை பறித்தது. தானியேல் அவருடைய சிறையிருப்பை, வாக்களிக்கப்பட்ட வாழ்க்கையை சோகமானதாகவும், வீணானதாகவும் கருதியிருக்கலாம். அதற்கு பதிலாக, அவர் எரேமியாவின் தீர்க்கதரிசனங்களை ஊக்கமாகப் படித்து, தேவனுடைய வாக்குறுதிகளின் விவரங்களில் அவருடைய விசுவசம் மற்றும் அறிவின் வளர்ச்சிக்காக ஜெபித்தார்.

எரேமியாவின் 70 ஆண்டுகால தீர்க்கதரிசனத்தைப் புரிந்துகொள்ளும்படி தானியேல் தேவனிடம் கேட்டார், தேவனும் அவருக்குப் பதிலளித்தார். (எரேமியா25:11, தானியேல் 9:1-2) யோபுவின் கதையை போலவே, தானியேலின் வாழ்க்கை அனுபவங்களும் ஒவ்வொரு இஸ்ரயேலின் இருதயத்திலும் தேவனைத் தேடும் விசுவாசத்திற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

## எசேக்கியேல் - கி.பி.597

"உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன். உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்." (எசேக்கியேல் 36:27,28)

ஆஹா, ஒவ்வொரு விசுவாசமுள்ள இஸ்ரயேலரும் தேவனுடைய இந்த ஆவியை தங்களுக்குள் உணர விரும்பினர். ஆனால் அது எப்போது நடக்கும்? தேவன் தம் ஆவியை இஸ்ரயேல் தேசத்தின் மேல் ஊற்றுவார் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசனம் கூறுகிறது. மேலும் இந்த ஆவியின் பொழிதல், தேவனுடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவும் அவருடைய நியாயத்தீர்ப்புகளைக் கடைப்பிடிக்கவும் அவர்களை பலவந்தப்படுத்தும்.

இஸ்ரயேல் தேசம் ஒற்றுமையாக நன்மையடையச் செய்வதற்கு தேவன் அவர்களை எப்படி நடத்துவார் ? ஒருவேளை அவர்களை ஒரு தேசமாக ஆசீர்வதிப்பதன் மூலமாகவும், தேவன் இஸ்ரயேலுடன் இருக்கிறார் என்பதை மற்ற நாடுகளுக்கு அவருடைய ஆசீர்வாதத்தை வெளிப்படுத்துவதன் மூலமாகவும் இருக்கலாம்!

## சகரியா - கி.பி. 520

"அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு, தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம், ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (சகரியா8:23)

ஒவ்வொரு விசுவாசமுள்ள இஸ்ரயேலரின் தாயும் இது உண்மையாக இருக்கவேண்டும் என்று நம்பினார்கள். இந்த வாக்குறுதியின் இலட்சியத்தில், அவள் தனது குழந்தைகளை மென்மையாக வழிநடத்தினாள். மேலும் தேவனுடைய தயவைப் பெறவும், அதை பகிர்ந்து கொள்ளவும் ஆயத்தமாக இருப்பதற்கு, ஒவ்வொருவரும் தங்கள் குணத்தில் நீதியாகிய சிறப்பான பகுதியை வளர்த்துக்கொள்ள ஊக்குவித்தாள். புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பெற உலகத்தின் மனுக்குலம் இஸ்ரயேலுக்குச் செல்லவேண்டும் என்பதே இந்த வாக்குறுதியின் உண்மையாகும். தேவனுடைய தயவால், இஸ்ரயேல் தேசம் தேசங்களில் உச்சத்தில் இருக்கும். மேலும் இஸ்ரயேல் தேசம், தேவனுடைய இராஜ்யத்தில்


Zechariah, prophet after the Babylonian captivity

பூமியின் மேல் உள்ள அதிகாரத்திலும் உச்சியில் இருக்கும். பூமியிலுள்ள எல்லா தேசங்களும் ஆபிரகாமின் சந்ததியின் மூலம் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்பதே தேவன் அவருக்கு கொடுத்த வாக்குத்தத்தம் ஆகும். வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களின் பலன்களைப் பெற அவர்கள் எருசலேமுக்கு வருவார்கள். இவர்கள் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான வழிகளில் இது ஒன்றாகும்.

"இன்னும் ஜனங்களும் அநேகம் பட்டணங்களின் குடிகளும் வருவார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஒரு பட்டணத்தின் குடிகள் மறுப்பட்டணத்தின் குடிகளிடத்தில் போய், நாம் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத் தேடவும் தீவிரித்து போவோம் வாருங்கள், நாங்களும் போவோம் என்று சொல்லுவார்கள். அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவும் வருவார்கள்."(சகரியா 8: 20-22)

எருசலேம் சத்தியம் மற்றும் ஒளியின் நகரமாக இருக்கும், எல்லா தேசங்களும் வந்து ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதியின் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். இந்த ஆசீர்வாதம் முதன்மையாக தலைமைத்துவத்துடன் கூடிய அரசாங்கத்திடமிருந்து வரும், அதில் ஆதியில் கொடுத்த வாக்குத்தத்தத்தைப் பெற்ற ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யோசேப்பு அடங்குவார்கள். (சகரியா12:5-6, மீகா5:5)

"சம்பவிப்பதென்னவென்றால் - யூதா வம்சத்தாரே, இஸ்ரயேல் வம்சத்தாரே, நீங்கள் புறஜாதிகளுக்குள் சாபமாயிருந்ததுபோலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன், பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது."(சகரியா8:13)

இஸ்ரயேலர்கள் இரட்சிக்கப்பட்டு, ஆசீர்வதிப்பதற்கு பலப்படுத்தப்படுவார்கள், இதனால் அவர்கள் தங்கள் தந்தை ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதியின் நிறைவேற்றத்தின் ஒரு பகுதியாக இருப்பார்கள்.

## மல்கியா

"ஆகையால் உங்கள் நிமித்தம் சீயோன் வயல்வெளியைப் போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், ஆலயத்தின் பர்வதம் காட்டுமேடுகளாய்ப்போம். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள், தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மல்கியா 3:10,12)

மேசியா வருவதற்கு முன்பு, சுமார் 450 வருடங்களுக்கு முன், இஸ்ரயேல் தேசத்திற்கு அளித்த கடைசி வாக்குறுதிகளில் இதுவும் ஒன்றாகும். வெறுமனே தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக இஸ்ரயேலருக்கு அது பெரும் ஆசீர்வாதத்தின் வாக்குறுதியாக இருந்தது. இந்த வாக்குறுதியின் உண்மையைச் சோதிப்பதன் மூலம் தன்னை "நிரூபித்துகொள்ளும்படிக்கு" தேவன் இஸ்ரயேல் தேசத்தோடு வழக்காடுகிறார். இந்த வாக்குறுதியின் உண்மையை நாமும் சோதிக்கவேண்டும். (ஏசாயா1:18)

## முடிவுரை

இப்போது, இஸ்ரயேலின் பாரம்பரியத்தின் ஆவியின் அடிப்படையில், நாம் சற்று சுய பரிசோதனை செய்யலாம். ஆபிரகாமின் வாக்குத்தத்தம் ஆபிரகாமைப் போல் நம்முடைய வாழ்க்கை முறையையும் மாற்றிவிட்டதா? யோபுவைப் போல நம்முடைய சொந்த ஏமாற்றங்களின் போராட்டத்தின் மீது தேவனுடைய நீதியின் மீது நம் நம்பிக்கையை மையப்படுத்துகிறோமா? ஆபிரகாமின் வாக்குத்தத்தம் நம்முடைய எல்லா ஏக்கங்களையும் திருப்திப்படுத்துகிறதா ? (1நாளாகமம் 28:9) நம்முடைய அன்புக்குரியவர்களுக்காகவும், மனுக்குலத்திற்காகவும் நம்முடைய நம்பிக்கைகள் மற்றும் கனவுகளுக்குப் பதிலளிக்கும் அளவுக்கு நம் இருதயத்தில் வலிமை உள்ளதா ? தானியேலைப் போல நாம் தேவனுடைய காலத்தையும் நேரத்தையும் நம்புகிறோமா? அப்படியானால், நாம் தேவனுடைய சமாதானத்திற்குள் பிரவேசித்திருப்போம். அவர் நமக்கு விசுவாசத்திற்குள்ளான இளைப்பாறுதலையும் தருவார். (எபிரெயர் 4:9-11) அனைவரின் இரட்சிப்புக்கான இந்த அழகான வாக்குத்தத்தத்தின் மகத்தான

நிறைவேற்றத்தின் உச்சத்தில் வாழக்கூடிய நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்!

வரலாறு முழுவதும் எந்தவொரு தனிப்பட்ட இஸ்ரயேலரின் விசுவாசத்திற்குரிய பதற்றமும், அவர்கள் அறிந்த உண்மைக்கான போராட்டமாக இருந்தது:- அவர்கள் தீர்க்கதரிசகளிடமிருந்து கேட்டதையும், அவர்களுடைய இராஜாவும் அவருடைய ரபீக்களும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டவைகள். அவர்கள் பொருளாதாரப் போராட்டங்கள், சமூகப் போராட்டங்கள், நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்கான போராட்டங்களை அனுபவித்தார்கள். இஸ்ரயேலர்கள் தேவன் மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்று தேவன் விரும்பினார் :- அவருடைய நீதியில் அவர்களை நியாயந்தீர்க்கவும், அவருடைய அன்பினால் அவர்களை பாதுகாக்கவும், அவருடைய இரக்கத்தினால் அவர்களை மன்னிக்கவும், அவருடைய வல்லமையில் அவர்களை இரட்சிக்கவும் அவர் விரும்பினார்.

எந்தவொரு இஸ்ரயேலனும், வெற்றியடைய வேண்டுமானால், அவர்கள் முதலில் தேவனுடனான தங்கள் தனிப்பட்ட உடன்படிக்கையை புரிந்து கொள்ளவேண்டும். (மீகா6:8) பின்னர் தேவனோடு இஸ்ரயேலின் நியாயப்பிரமாண உடன்படிக்கையை புரிந்துகொள்ள வேண்டும். (யாத்திராகமம்19) மேலும், தங்களுடைய புரிதலின் ஆவிக்குரிய செவிகளோடு, தேவனுடைய சத்தியத்தை கேட்பதற்கு, கடந்தகாலத்தில் வாழ்ந்த ஒவ்வொரு தீர்க்கதரிசிகள், இராஜாக்கள், ரபிகள் ஆகியோரின் தனித்தன்மைகளை கவனிக்கவேண்டியது அவசியம்.

"அக்காலத்தில் நீ என்னை இனி பாகாலி என்று சொல்லாமல், ஈஷி என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார். நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைத்து, இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன், என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன், அவர்கள் என் தேவனே என்பார்கள் என்றார்."(ஓசியா2:16, 23)

தேவன் ஆபிரகாமுக்கு நிபந்தனையற்ற வாக்குறுதியை அளித்த சிறிது நேரத்திற்கு பின் இஸ்ரயேல் தேசம் கீழ்ப்படியாமல், சுய விருப்பம் கொண்டிருந்தது. தேவன் அவர்களை ஒரு "எஜமானராக" கண்காணிக்கிறார். ஆனால் ஒரு நாள் நான் இஸ்ரயேலின் "கணவனாக" இருப்பேன் என்று தேவன் வாக்குறுதி அளித்தது போல், அவர் தம்முடைய ஒரே மகனையும் நமக்குக் கணவராகக் கொடுத்தார். அவருடைய தீர்க்கதரிசிகளுக்கு அவர் ஒரு வேலையைக் கொடுத்தது போலவே, அவர் நமக்கும் ஒரு வேலையைக் கொடுத்தார். அதாவது அவருடைய பரிசுத்த இராஜ்யத்தில் இராஜாக்கள் மற்றும் ஆசாரியர்களின் வாயாக இருக்கக்கூடிய வேலையை நமக்கு கொடுத்திருக்கிறார்.

நம் வாழ்க்கையில் தேவனை பரிசுத்தப் படுத்துவோம், அவருடைய நீதியைப் பகுத்தறிவோம், அவருடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைப்பதற்காக அவருடைய வாதாடல்களுக்கு பதிலளிப்போம். (சங்கீதம் 1:2-4)



### இன்றைய தீர்க்கதரிசனம்

# இஸ்ரயேல் மற்றும் ரஷ்யா - உக்ரேன் மோதல்

"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்... கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல அந்த ஜாதிகளோடே போராடுவார்.

(சகரியா 14: 2, 3)"

(இந்த கட்டுரை பிப்ரவரி பிற்பகுதியில் எழுதப்பட்டது. உக்ரேனில் மோதல் தொடர்பான செய்திகள் இப்பொழுது மாறியிருக்கலாம்.)

2021 இல், 100,000 ரஷ்ய இராணுவப் படைகள் உக்ரைனின் எல்லையில் குவிக்கப்பட்டன. பிப்ரவரி 2022இல் ரஷ்யாவின் தொடர்ச்சியான படையெடுப்பின் விளைவாக, இஸ்ரேலிய பிரதமர் நஃப்தலி பென்னட் உக்ரைனில் உள்ள இஸ்ரயேலர்களை வீட்டிற்கு வருமாறும், உக்ரைனில் உள்ள அனைத்து உக்ரேனிய யூதர்களையும் இஸ்ரயேலுக்கு வருமாறும் அறிவுறுத்தினார். இஸ்ரேலிய வெளியுறவு மந்திரி யாயர் லாபிட் இவ்வாறு அறிவித்தார், "இஸ்ரயேல் ரஷ்யா மற்றும் உக்ரைனுடன் ஆழமான, நீடித்த மற்றும் நல்ல உறவுகளைக் கொண்டுள்ளது. இரு நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான இஸ்ரயேலியர்கள் உள்ளனர், இரு நாடுகளிலும் லட்சக்கணக்கான யூதர்கள் உள்ளனர். அவர்களின் பாதுகாப்பு எங்களுக்கு முதன்மையானது" (யூத மெய்நிகர் நூலகம் உக்ரைனில் 43,000 யூதர்கள் வாழ்வதாக கணக்கிடுகிறது, இருப்பினும் வெளியுறவு அமைச்சகம் அதிகமாக பரிந்துரைக்கிறது. கீழே பாருங்கள்.)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரேனின் "இராணுவமாயமாக்கல் மற்றும் நாசிமயமாக்கல்" ஆகியவற்றை தடுப்பதை மேற்பார்வையிடுவதாக உறுதியளித்தார், இதற்கு யூதரான உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்சி இவ்வாறு பதிலளித்தார், "நான் எப்படி நாஜி ஆக முடியும் ? சோவியத் இராணுவத்தின் காலாட்படையில் முழுப் போரையும் கடந்து, ஒரு சுதந்திர உக்ரைனில் கர்னலாக இறந்த எனது தாத்தாவிடம் அதை விளக்குங்கள். "தனது தாத்தாவின் மூன்று சகோதரர்கள் யூத இனப் படுகொலையில் கொல்லப்பட்டதாக உக்ரைன் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ப்னினா தமேனோ ஷேதே, இஸ்யேலிய அலியா மற்றும் ஒருங்கிணைப்பு மந்திரி, ஆயிரக்கணக்கில் குடியேறுபவர்களின் வருகைக்கு தயாராகி வருகிறார். இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் உக்ரைனில் யூதர்கள் அதிக அளவில் வாழ்ந்தனர். யூத மெய்நிகர் நூலகம் கூற்றுப்படி, நாஜி ஆட்சியின் போது 900,000 முதல் 1.6 மில்லியன் வரை கொல்லப்பட்டனர். 1959 ஆம் ஆண்டில், யூத மக்கள் தொகை சுமார் 840,000 ஆக இருந்தது. 1989 இல் சுமார் 487,000 ஆகக் குறைந்தது. 2014 இல் ரஷ்யா உக்ரைனின் கிரிமியன் தீபகற்பத்தை ஆக்கிரமித்தபோது, நாட்டை விட்டு வெளியேறும் 19,000 யூதர்களை யூத வெளியுறவு அமைச்சகம் வரவேற்றது. இன்று அட்லாண்டிக் கவுன்சிலின் கூற்றுப்படி, இஸ்ரயேலின் உக்ரேனிய யூத மக்கள் தொகை சுமார் 500,000 ஆகும்.

### ரஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள்

இஸ்ரயேல் ரஷ்யாவுடன் உறவுகளைப் பேணி வருகிறது. ஆனால் அந்த உறவு பலவீனமாக உள்ளது. முன்னாள் கேஜீபி செயல்பாட்டாளரான புடினின் கீழ், ரஷ்யா, மத்திய கிழக்கில், குறிப்பாக சிரியாவில் தனது இருப்பை அதிகரித்துள்ளது. மிடில் ஈஸ்ட் ஐ என்ற செய்தி பத்திரிக்கையின் கூற்றுப்படி, உக்ரேனிய சுதந்திரத்திற்கு இஸ்ரயேல் ஆதரவு தெரிவித்தபோது, கோலன் குன்றுகளை இஸ்ரயேல் ஆக்கிரமித்ததை ரஷ்யா கண்டித்தது. சிரியாவில் ஈரானிய இராணுவ இலக்குகளை தேடும் இஸ்ரயேலிய ஜெட் விமானங்களை ரஷ்யா வழங்கிய ஏவுகணை அமைப்புகள் மற்றும் பிற



பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் முறியடித்தன. ஈரானிய ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கான இஸ்ரயேலிய முக்கியமாக தேவைப்படும் வான்வெளியை கட்டுப்படுத்தினால் ஈரான் ஹெஸ்பொல்லா போன்ற பயங்கரவாத குழுக்களுக்கு மேம்பட்ட ஆயுதங்களை சுதந்திரமாக வழங்க முடியும்.

பிப்ரவரி தொடக்கத்தில், அமெரிக்க ஜனாதிபதி பிடென், வடக்கு சிரியாவில் சிறப்புப் படைகள் நடத்திய தாக்குதலில், இஸ்லாமிய அரசின் (முன்னாள் ISIS)தலைவராக அபு இப்ராஹின் அல் - ஹாஷிமி அல் குராஷியை வெற்றிகரமாகக் கொன்றதாக அறிவித்தார். உலக வல்லரசுகளில், அமெரிக்கா தொடர்ந்து இப்பிராந்தியத்தில் மிகவும் திறமையான இராணுவப் படைகளைக் கொண்டுள்ளது, ஆனால் அந்தப் படைகளைப் பயன்படுத்தத் தயங்குகிறது. ஆசியாவில், குறிப்பாக சீனாவில் புதிய கவனம் செலுத்துவதனால், அமெரிக்கத் தலைவர்கள் இஸ்ரயேலின் பாதுகாப்பிற்கு குறைந்த முன்னுரிமை அளித்துள்ளனர்.

இதன் விளைவாக, லெபனான், சிரியா, ஈராக், ஏமன் மற்றும் பாலஸ்தீனப் பகுதிகளில் உள்ள போராளிகளுக்கு ட்ரோன்கள், ராக்கெட்டுகள், ஏவுகணைகள், இராணுவப் பயிற்சி மற்றும் ஆதரவை வழங்கி, இந்த பிராந்தியத்தில் ஈரான் தனது கவனத்தை புதுப்பித்துள்ளது. சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மீது பயங்கரவாத குழுக்கள் மூலம் பினாமி தாக்குதல்களை தெஹ்ரான் அதிகரித்துள்ளது. பிப்ரவரி அறிக்கையின்படி, "கிரேட் நபி 17" என்று அழைக்கப்படும் ஈரானிய இராணுவப் பயிற்சியானது அணுசக்தி திறன்களைத் தடுப்பதில் மேற்கத்திய அல்லது இஸ்ரயேலின் படைகளின் எந்தவொரு ஆக்கிரமிப்புக்கும் பேரழிவு தரக்கூடிய பதிலைக் காட்டியது.

ஆபிரகாமிக் உடன்படிக்கைகள் (2020 நவம்பர்/ டிசம்பர் 2020 ஆம் ஆண்டு கிறிஸ்துவின் இராஜ்யத்தின் ஹெரால்டின் இன்றைய தீர்க்கதரிசனத்தை காண்க) போன்ற பாதுகாப்பை உறுதிப்படுத்த இஸ்ரயேல் தொடர்ந்து பிராந்திய கூட்டாண்மைகளை நாடுகிறது. அரசாங்கங்கள் சமீபத்தில் எகிப்து மற்றும் ஜோர்டானுக்கு எரிவாயு ஏற்றுமதி செய்தவற்கான ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளது. மேலும் சைப்ரஸ், எகிப்து, பிரான்ஸ், கிரீஸ் இத்தாலி மற்றும் ஜோர்டான்




மற்றும் பாலஸ்தீனம் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய கிழக்கு மத்திய தரைக்கடல் எரிவாயு மன்றத்தில் இணைந்துள்ளது. நவம்பர் 2021 இல், இஸ்ரயேல் ஜோர்டான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் ஆற்றலுக்கான நீர் கூட்டாண்மையை அறிவித்தது. சமீபத்தில், இஸ்ரயேலுடன் இயற்கை எரிவாயுவிற்கான புதிய ஏற்பாட்டின் சாத்தியத்தை ஆராய்வதாக துருக்கி அறிவித்தது.

## இஸ்ரயேலுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதி

ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தில் இஸ்ரயேலின் மறுஸ்தாபனம் இந்தக் காலத்தில் மிக முக்கியமான தீர்க்கதரிசனத்தினமாகும். இது வேத தீர்க்கதரிசிகளின வார்த்தைகளை உறுதிப்படுத்துகிறது. ஆதியாகமம் 28:12-14இல் யாக்கோபு கண்ட வானத்திற்கும் பூமிக்கும் இடையே நீட்டிய ஏணியின் தரிசனம், நித்தியமான மாற்ற முடியாத வாக்குறுதியைக் கொண்டிருந்தது - "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர், நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும், நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய், உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்."

ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு ஆகியோருக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு தேவன் ஏற்கனவே இஸ்ரயேலை மீட்டெடுத்துவிட்டார். திரும்பிய மக்களுடன் தேவன் செய்யும் நித்திய உடன்படிக்கையைப் பற்றி எரேமியா கூறியுள்ளார் (எரேமியா 32:40,41) ஆபிரகாமின் சந்ததியினர் இனி ஒருபோதும் அந்த தேசத்திலிருந்து அகற்றப்பட மாட்டார்கள் என்பதை ஆமோஸ் உறுதியளித்தார்.

ஆபிரகாமின் சந்ததியினர் இனி ஒருபோதும் அந்த தேசத்திலிருந்து அகற்றப்பட மாட்டார்கள் என்பதை ஆமோஸ் உறுதியளித்தார், 1878 இல் பெட்டா திக்வாவில் முதல் குடியேற்றத்திலிருந்து அங்கு காணப்பட்ட அதிசயமாக விடுதலைகளுக்கு சாட்சியமளித்தார். (ஆமோஸ் 9:14,15)

இந்த நேரத்தில், முழு உலகமும் இதேபோன்ற துன்ப நேரத்தை அனுபவிக்கும் - "இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறது போல, அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும், அவர்கள் தப்பிப் போவதில்லை" (1தெசலோனிக்கேயர் 5: 2, 3) இந்த நேரத்தில், மற்ற நாடுகள் வீழ்ச்சியடையும் போது, மீண்டும் சேகரிக்கப்பட்ட இஸ்ரயேல் தேசம் பிழைக்கும். பாதுகாப்புக்காக இஸ்ரயேல் எப்போதும் நட்பு நாடுகளைச் சார்ந்திருக்க முடியாது என்பதையே இன்று நாம் காணும் நிகழ்வுகள் காட்டுகின்றன. அதன் அண்டை நாடுகளுடனான கூட்டணிகள் இறுதியில் இதையும் நிரூபிக்கும். மனிதனின் வரலாற்றிலும் உச்சக்கட்ட புள்ளியாகிய "கோகும் மாகோகும்" படையெடுப்பு நிகழும்போது இஸ்ரயேலுக்கு தெய்வீக உதவி தேவைப்படும். இந்த போர் எசேக்கியேல் 38 இல் எருசலேமின் மீதான தாக்குதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் கூட்டணியில் உள்ள நாடுகள் அத்தகைய படையெடுப்பிலிருந்து நன்மைகளைத் தேடவோ அல்லது உதவி செய்யவோ முடியாது. (எசேக்கியேல் 38:12-14) சூழ்நிலை நம்பிக்கையற்றதாக தோன்றும்போது, யெகோவா தாமே தலையிடுவார். இஸ்ரயேலில் கோகும் மாகோகும் தோற்கடிக்கப்படுவது யெகோவாவின் வல்லமையை தீர்க்கமாக வெளிப்படுத்தும் - "உமது கோபத்தின் காலத்திலே அவர்களை அக்கினிச் சூளையாக்கிப் போடுவீர், கர்த்தர் தமது கோபத்திலே அவர்களை அழிப்பார், அக்கினி அவர்களைப் பட்சிக்கும்." (சங்கீதம் 21: 9)

நம் ஆதார வசனம் விவரிக்கிறபடி, பண்டைய நாட்களில் இஸ்ரயேல் துரோகம் செய்தபோது, அவர்களைத் தண்டிக்க எதிரிகள் அனுப்பப்பட்டனர். மக்கள் கூக்குரலிடுவார்கள், தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி, அவர்களை யெகோவாவிடம் திருப்பி விடுவிப்பார். எல்லாம் நம்பிக்கையற்றதாகத் தோன்றும்போது, அதிசயமான நிகழ்வுகள் நடக்கும். முற்பிதாக்கள், ஆபிரகாம், மோசே மற்றும் அவர்களின் தலைசிறந்த இராஜாவான தாவீது, ஆகியோர் தலைமைப் பதவிகளுக்கு உயர்வார்கள் (சங்கீதம் 45:16, ஏசாயா1:26) வெற்றிக்காக யெகோவாவை சார்ந்திருக்கும்படி அவர்கள் தூண்டுவார்கள். இஸ்ரயேலின் எதிரிகள் தோற்கடிக்கப்படுவதால் தேவன் மகிமைப்படுத்தப்பட்டு பரிசுத்தப்படுத்தப்படுவார். (எசேக்கியேல் 38:16) அப்போது இஸ்ரயேலர் அவர்களின் உண்மையான மேசியாவை அடையாளம் கண்டுகொள்வார்கள், யெகோவா தம்முடைய ஆவியை அவர்கள் மீது ஊற்றுவார். "அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன். நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா12:9, 10)

வரலாற்றின் இந்த கட்டத்திற்கு முன், கிறிஸ்துவின் மணமகள் மணவாட்டி முடிக்கப்பட வேண்டும். இஸ்ரயேலின் அடுத்தடுத்த விடுதலை இஸ்ரயேலுக்கு மட்டுமல்ல, பூமியின் கோடிக்கணக்கான மக்களுக்கும் ஒரு சாட்சியாக இருக்கும். எருசலேமுக்கு எதிராக வந்த அனைத்து தேசங்களின் மக்களும் மனுகுலத்தின் உயிர்த்தெழுந்த உலகத்திற்கு அமைதியையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வரும் தேவனை ஒப்புக்கொண்டு வணங்குவதற்காக அந்த நகரத்திற்குச் செல்வார்கள் (சகரியா14:16-19) இந்த கோடிக்கணக்கானோரின் ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாக இருப்போம் என்று நம்பும் நாமும் நமது உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக இருப்போம், தொடர்ந்து வரும் ஆசீர்வாதங்களை எதிர்நோக்குவோம்!

தனிச்சுற்றுக்கு மட்டும்

மேலும் தகவல் மற்றும் புத்தக தேவைகளுக்கு தொடர்பு :

ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்ததத்தம் பண்ணினபோது ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டு; நிச்சயமாவே நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உனை பெருகவே பெருகப்பண்ணுவேன்.தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவை களைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய் நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.

எபிரெயர் 6:13-18, பிலிப்பியர்

